Day Class
86 A/L
'SOUND'
திரு சத்தியசிலன்
ஆரம்பம்:- 07-04-1986
Monday- 7-15- A.M
Mon - Fri - 7.15 A.M
New Master
Institute
B.M C. Lane, JAFFNA.

சஞ்சீவி
அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி
விலை ரூ-2/=

Day CLass
86 AL
'Sound'
திரு சத்தியசிலன்
ஆரம்பம்: 07 - 04 - 86
Monday- 7.15 A.M
Mon - Fri - 7.15 A.M
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA

மலே:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு பங்குனி மீ 23 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 24 (05-04-1986) -SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:11

## கருத்துக் கலசம்

மயூரா

கல்வி, செல்வம், வீரம். இந்த மூன்றிலும் மனிதனது முதன்மைத் தேவை எது? வாழ்க்கைக்கு இன்றி அமையாதது எது?

இது சம்பந்தமாக புராண காலம் தொட்டு சர்ச்சைகளும், விவாதங்களும் நடந்து வந்திருக்கின்றன வாழ்க்கைக்கு மூன்றுமே அத்தியாவசியம். ஒன்று இருந்து மற்ற இரண்டும் இல்லாவிடில் வாழ்க்கை வளம் பெறாது. கல்வி இருந்தால் அதன் துணை கொண்டு மற்ற இரண்டையும் அடையலாம். இவ்வாறு வாதங்கள், நியாயங்கள் பல விதமாகக் கற்பிக்கப்படுவது உண்டு.

இந்த மூன்று செல்வங்கள் இருப்பினும் உடல் ஆரோக்கியம் இன்றி ஒருவன் அவற்றை அனுபவிக்க இயலாது. அதனால் தான் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று நம் முன்னோர்கள் கூறிப் போந்தார்கள்

நாளைக்கு அது செய்யவேண்டும், இது செய்யவேண்டும் அங்கே போகவேண்டும் என்று, இன்று நாம் நினைக்கிறோம் திடீரென ஒரு சுகயீனம் வந்து விட்டால் எதையுமே செய்யமுடியாது. எல்லா நிகழ்ச்சிகளும், திட்டங்களும் வெறும் நினைப்பாகவே நின்று விடுகின்றன

இந்தக் காலத்தில் மக்களில் அனேகம் பேர் தேகசுகம் கெட்டவர்களாகவே இருக்கின்றார்கள். எமது அன்றாட வாழ்க்கை முறை, சாப்பாட்டுப் பழக்கங்கள், உணவு முறைகள் என்பவவே இதற்கு அடிப்படைக் காரணிகள்.

பனம்பணாட்டு, ஒடியல்கூழ், பழஞ்சோறு, குரக்கன் பிட்டு, நல்லெண்ணெய்யும், உழுத்தங் களியும் சாப்பிட்ட எமது முதல் சந்ததியினரின் தேக ஆரோக்கியத்துக்கு அருகிலும் நம்மால் நிற்கமுடியவில்லை. 75, 80 வயது வரை அவர்கள் வயலில் ஏர் பிடித்து உழுதார்கள் அல்லது வேறு கஷ்டமான வேலைகளைச் செய்தார்கள். ஆனால் இன்று ..? 25 வயது இளைஞன் கூட ஏகப்பட்ட வியாதிப் பட்டியலுடன் உலாவுகிறான் இரத்த அழுத்தம், இருதய வியாதி, புற்றுநோய், சலரோகம் என்றும், இன்னும் ஏதேதோ புதிய வியாதிகளும் இப்போது சர்வசாதாரணம். இவருக்கும் இந்த வியாதி வருமா என்று மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு தேகசுகம் குறைந்த மக்கள் கூட்டம் ஒன்று உருவாகி வருகிறது.

அதனாலும், இப்போது நாளாந்த நிகழ்ச்சியாகி விட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களாலும் ஆஸ்பத்திரிகளில் இரத்த வங்கிகள் எப்போதும் நிரம்பி இருக்க வேண்டிய அவசியம் எமது பகுதியில் தோன்றியுள்ளது.

அதற்கு எதிர்மாறாக இரத்த வங்கிகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் அமைப்புகளை ஓர் அணியாக்க தீவிர முயற்சி

## புதுடில்லி உயர்வட்டார வற்புறுத்தலின் விளைவு

— சஞ்சீவி சிறப்புச் செய்தியாளர் —

சென்னை, ஏப்ரல் 4

தமிழ் விடுதலை அமைப்புக்களை ஓர் அணியின் கீழ் கொண்டுவரும் முயற்சி மீண்டும் சுறுசுறுப்படைந்துள்ளது

சென்னையில், இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை காட்டும் சகல அரசியல் தலைவர்களும் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

டில்லி உயர் வட்டாரங்களின் வலியுறுத்தலைத் தொடர்ந்தே ஒற்றுமை முயற்சிகள் மீண்டும் மேற்கொள்ளப்படுவதாக அறிய வருகிறது

சகல விடுதலை அமைப்புக்களையும் ஓர் அமைப்பின் கீழ் கொண்டு வருவதே இம் முயற்சிகளின் நோக்கம்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கான வாய்ப்புக்கள் குறைந்து வருகின்றன —

அதே நேரத்தில் இலங்கை மீதான போக்கை இந்தியா கடுமையாக்கிக் கொண்டு வருகின்றது.—

வடக்கு, கிழக்குப்பகுதிகளிலும் தமிழர்கள் மீதான வன்செயல்கள் அதிகரித்து வருகின்றன-

அப்பாவித் தமிழ் மக்கள் சொல்லொணாத் துயர் மத்தியில் வாழ்கின்றனர்.—

இச் சூழ்நிலையில் தமிழர் விடுதலை அமைப்புக்கள் இன்னும் பிரிந்து இருப்பது தமிழரின் நலனுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி விடக்கூடும். —

எனவே தமிழர் அமைப்புக்கள் அனைத்தும் ஓர் அமைப்பின் கீழ் குரல் எழுப்பவேண்டிய கால கட்டமும் இதுவே ஆகும்—

இப்படியான கருத்துக்களை ஒற்றுமை முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் தமிழர் அமைப்புக்களிடம் முன்வைத்துள்ளனர் என்று தெரிகின்றது.

---

**சுபநேரம்**
**05-04-1986**
சனிக்கிழமை

சுபநேரம்
3 09 முதல் 4 39 வரை
ராகுகாலம்!
9.09 முதல் 10 39 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
ஏகாதசி விரதம்

---

## ஸ்ரான்லி வீதி போக்குவரத்துத் தடை

நல்லூர் ஏப். 5

யாழ். ஸ்ரான்லி வீதி நேற்று போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டது.

இவ் வீதியில் உள்ள அனைத்து கடைகளும் மூடப்பட்டிருந்தன.

சைக்கிள்கள் உட்பட அனைத்து வாகனங்களும் இப்பாதையால் செல்வது நேற்றுத் தடை செய்யப்பட்டது

கடந்த முதலாம் திகதி யாழ். விக்ரர் அன் சன்ஸ் ஸ்தாபனத்தில் இடம் பெற்ற கொள்ளையைக் கண்டித்தே கடையடைப்பும், வீதித்தடையும் ஏற்படுத்தப்பட்டன.

இக் கொள்ளையினால் இங்கு கடமையாற்றும் 25 ஊழியர்களும் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சித்தன்கேணியில் ரூ. 2 லட்சம் பெறுமதியான பொருள்கள் கொள்ளை!

வட்டுக்கோட்டை, ஏப். 5

சித்தன்கேணி கலைநகரில் நள்ளிரவு நேரத்தில் துப்பாக்கி முனையில் சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வேலுப்பிள்ளை செல்வராசா என்பவரது வீட்டிலேயே இக்கொள்ளைச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 12 மணிக்கும் 2 மணிக்கும் இடையில் நடைபெற்றிருக்கிறது.

வெள்ளை மினிவானில் துப்பாக்கிகளுடன் வந்த இளைஞர் கோஷ்டி ஒன்றே கொள்ளையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

சுமார் 25 இளைஞர்கள் வரை வீட்டுக்குள்ளும், வீட்டைச் சுற்றியும், வீதிகளிலும், சந்திகளிலும் துப்பாக்கியுடன் காவல் புரிந்த நிலையிலேயே இக் கொள்ளை நாடகம் நடைபெற்றது.

## நாட்டிய அரங்கேற்றம்



அடையாறு இலட்சுமணனின் மாணவி செல்வி சந்திரகாந்தா சங்கரப்பிள்ளையின் பரத நாட்டிய அரங்கேற்றம் நாளை பண்டத்தரிப்பு மகளிர் மகா வித்தியாலயத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறுகிறது.

## இனப்பிரச்சினை: இலங்கை உள்ளுணர்வுடன் முயற்சித்தால் இந்தியா உதவும்

### டிக்ஸிற் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 5

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உள்ளுணர்வுடன் இலங்கை அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு இந்திய அரசின் உதவி கிடைக்கும்.

அதேநேரத்தில் இலங்கையில் அதிகரித்துவரும் வன்செயல்கள் குறித்து நாம் பார்த்துக்கொண்டு வாளா இருக்க முடியாது.

இப்படி இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் சொன்னார்.

நுவரெலியாவில் உள்ள சர்வதேச தியான நிலையத்துக்கு 100 தமிழ் ஆங்கில நூல்களை இந்தியத் தூதர் அன்பளிப்புச் செய்த வைபவம் நேற்றுப் பகல் இந்துமத விவகார அமைச்சில் இடம் பெற்றது.

அமைச்சர் செ. இராசதுரை புத்தகங்களைப் பொறுப்பேற்று தியான நிலையத் தலைவர் திரு. ஆர். கே முருகேசவிடம் ஒப்படைத்தார்.

அந்த வைபவத்தில் பேசுகையில் திரு. டிக்ஸிற் தொடர்ந்து சொன்னதாவது:

இனப்பிரச்சினையை இந்தியா கைநழுவி விட்டது என்றும், இலங்கையின் இந்தியா தலையிடப்பார்க்கின்றது என்றும்,

இலங்கை நிலைமை மகிழ்ச்சியாக இல்லை என்றும் பத்திரிகைகள் பலவாறாக எழுதுகின்றன.

இத்தகைய விரோத கருத்துக்கள் நல்லெண்ண சூழ்நிலையைக் கட்டி எழுப்பி தீர்வுகாண உதவப் போவது இல்லை.

இன்றைய நிலைக்குரிய குற்றத்தைக் கூறுபடுத்தி யார்மீதும் சுமத்துவதில் அர்த்தமில்லை

நல்லெண்ணம், நியாய உணர்வு ஆகிய அடிப்படையில் எல்லா மக்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டாரிக்கு அந்தப் பணி இனிமேல் இல்லை!

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, ஏப்ரல் 5

இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் பேச்சுவார்த்தை, விசேஷ தூது என்று எந்தப் பணியையும் செய்யும் பொறுப்பு இந்திய முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் திரு. பண்டாரியிடம் ஒப்படைக்கப்படமாட்டாது.

இனப் பிரச்சினை விவகாரத்தில் அவர் தமிழர்களின் எண்ணத்துக்கு மாறாகவும் —

இலங்கை அரசாங்கத்தின் செல்லப்பிள்ளையாகவும் நடந்து கொள்கிறார் என்பது இந்திய அரசின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

அவரை இப்பணியில் ஈடுபடுத்த வேண்டாம் என்று மிக கேந்திர ஸ்தானத்தில் உள்ளவரும் அடிக்கடி இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியை சந்திப்பவருமான ஒருவர் பிரதமரிடமே வெளிப்படையாகக் கூறியதாகவும் அறியப்படுகிறது.

அதனால் திரு. பண்டாரி இலங்கை இனப் பிரச்சினை சம்பந்தமாக இனிமேல் எவ்வித பணியையும் மேற்கொள்ளும் சாத்தியம் இல்லை என்பது நிச்சயமாகி விட்டதாக இங்கு அரசியல் வட்டாரங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

## பலாலியில் நடந்து சென்று இராணுவம் துப்பாக்கிச் சூடு!

பலாலி, ஏப். 5

நேற்றுக் காலை இராணுவத்தினர் பலாலி இராணுவ முகாமில் இருந்து கிழக்கே பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிப் பக்கமாகவும், மேற்கே மயிலிட்டிப் பகுதிகளுக்குள்ளும் நடந்து சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

பலாலி விமான நிலைய தெற்குப் பக்கமாக கவச வாகனங்கள் நிற்பாட்டப்பட்டிருந்தன.

கவச வாகனங்களில் இருந்து கட்டுவன், குரும்பசிட்டி, மடத்தடிப் பக்கம் நோக்கிச் சுடப்பட்டது

இதே நேரம் ஹெலிக்கொப்டர்கள் முகாமையும் விமான நிலையத்தையும் அதனுடன் இணைந்த பகுதியையும் நோக்கிச் சுற்றியபடி பாதுகாப்பளித்துக் கொண்டிருந்தன

மயிலிட்டிப்பக்கத்தில் வீதிக்கு மேற்குப் பக்கத்தில் இருந்து போராளிகள் ஹெலிக்கொப்டரை நோக்கி ரொக்கட் லோஞ்சர் மூலம் தாக்குதலை மேற்கொண்டனர்.

திடீரென உயர எழுந்த ஹெலிக்கொப்டர் உயரப் பறந்தபடியே மயிலிட்டியையும் அதனை அண்டிய பகுதிகளையும் நோக்கி சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம்

(8 - ஆம் பக்கம் பார்க்க)

## 80 தமிழ் அகதிகள் இந்தியா செல்லும் வழியில் பிடிக்கப்பட்டனர்

திருகோணமலை, ஏப். 5

இந்தியா நோக்கிச் சென்று கொண்டு இருக்கையில் சுண்டிக்குளம் கடலில் வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சுமார் 80 திருமலைத் தமிழ் அகதிகள் நேற்றுத் திருமலை அகதி முகாம்களில் ஒப்படைக்கப்பட்டனர்.

வீடுகள் கட்டித் தந்து புனர்வாழ்வு அளிக்கும் வரை அகதி முகாம்களில் இருக்கும்படி இவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

இது பற்றிய விவரமாவது;

சுண்டிக்குளம் கடலில் சுமார் 80 தமிழர்களுடன் (பெண்கள், குழந்தைகள் உட்பட) சென்று கொண்டு இருந்த படகு ஒன்றை இலங்கை கடற்படை பீரங்கிப் படகு ஒன்று வழி மறித்தது.

படகில் இருந்த அனைவரும் பீரங்கிப் படகில் ஏற்றப்பட்டனர். அதன் பின்னர் அகதிகள் சென்ற படகு, கடற்படையினரால் சேதப்படுத்தப்பட்டுக் கடலில் மூழ்கடிக்கப்பட்டது.

திருகோணமலைக் கடற்படை முகாமுக்கு சகல அகதிகளும் கொண்டு போகப்பட்டனர்.

அங்கு வைத்து விசாரணை நடத்தப்பட்டது

'வன்செயல்களில்' வீடு வாசல்களை இழந்து விட்டோம் எங்களுக்கு இங்கு வாழ்க்கை நடத்த முடியாத நிலை. அதனால்தான்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நிலாவெளியில் கொள்ளை

திருகோணமலை, ஏப். 5

கடந்த வியாழக்கிழமை இரவு நிலாவெளிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மொத்த விற்பனை நிலையம் கொள்ளை இடப்பட்டது

இனந்தெரியாத நபர்கள் ஆயுதங்களுடன் சென்று இக்கொள்ளையை நடத்தினர் என்று கூறப்பட்டுள்ளது.

லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளை இடப்பட்டிருக்கலாம் என்று பூர்வாங்க விசாரணைகளில் இருந்து தெரிய வருகிறது.

## காஸ் சிலின்டர்கள் மூடி கழற்றப்பட்ட பின்னரே கொழும்புக்கு

நல்லூர், ஏப் 5

வடபகுதி காஸ் சிலின்டர்கள் யாவும் மேல் மூடி (நொசில்ஸ்) கழற்றப்பட்டே இனிமேல் கொழும்புக்குச் செல்லும்.

இது சம்பந்தமான அறிவுறுத்தல் ஒன்று சபுகஸ்கந்தை காஸ் தொழிற்சாலையினால் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதன் பிரகாரம் யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து அனுப்பப்படும் காஸ் சிலின்டர்களும் இனி மேல் மூடி கழற்றப்பட்டே கொழும்பு எடுத்துச் செல்லப்படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் சபுகஸ்கந்தை தொழிற்சாலையில் காஸ் சிலின்டர் ஒன்று வெடித்து தொழிலாளி ஒருவர் மரணமானதும்—

இந்தச் சம்பவத்திற்கு

## குண்டு வீச்சு!

சென்னை, ஏப்ரல் 4

இந்திரா காங்கிரஸின் பாண்டிச்சேரி தலைவரும் எம். பியுமான பி. சண்முகத்தின் படுக்கையை நோக்கி குண்டு வீசப்பட்டது. ஆனால் அவர் தெய்வாதீனமாக காயம் ஏதும் இன்றித் தப்பிக்கொண்டார்.

அவரது கட்டிலும் வீட்டிலிருந்த வேறு பொருள்களும் சேதமடைந்தன.

## மருதானை குண்டு செம்படை உரிமை

சென்னை, ஏப்ரல் 4

கடந்த திங்கட்கிழமை இரவு மருதானையில் வைக்கப்பட்ட பார்சல் குண்டுக்கு தமிழீழ செம்படை இயக்கம் உரிமை கோரியிருக்கிறது.

மருதானைப் பகுதி அதிரும் வகையில் இக்குண்டு வெடித்தது என்பது தெரிந்ததே.

இக்குண்டு வெடிப்புத் தொடர்பாக தமிழீழ செம்படை இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த திங்கட்கிழமை (31 3 86.) அன்று இரவு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திரியாய் அகதிகள் உணவுப் பற்றுக்குறையால் திருமலை நோக்கி வருகை

திருகோணமலை, ஏப். 5

திரியாய்க் கிராமத்தில் இருந்து தமிழ்க் கிராம வாசிகள் உணவு பற்றுக்குறை காரணமாக கால்நடையாக திருமலைப் பட்டினம் நோக்கி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்று 13 குடும்பங்கள் இப்படி திருமலை நகர் வந்தடைந்தன.

இந்து இளைஞர் மன்றம் அகதிகளை உபசரித்து சென். ஜோசப் கல்லூரி அகதி முகாமில் சேர்ப்பித்தனர்.

திருமலையில் இருந்து வடக்கு நோக்கி 30 மைல் தொலைவில் திரியாய் உள்ளது.

தமிழர் வாழும் கிராமம் இது. உணவுத் தட்டுப்பாடு காரணமாகவே அங்கிருந்து தமிழர் வெளியேறுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அப்பகுதியில் உணவு விநியோக வேலைகளில் அதிக அக்கறை காட்டுவது இல்லை என்று கூறப்படுகின்றது.

புதுமையும் எழிலும் பொலியும் பஞ்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேச வழமைச் சட்டம்

# பிரதேச மரபுகளைப் பிரதிபலிப்பது இன ரீதியானது என்பது புனையுரை

மரபு ரீதியான பாரம்பரிய பிரதேசத்தில் வாழும் எந்த தேசிய இனத்துக்கும் தனித்துவமான சட்டங்கள் இருப்பதுண்டு

அந்த வகையில் உருவான தேச வழமைச் சட்டம் ஒரு பக்க சார்புடையது என்று இனவாதம் பேசப்படுகிறது.

இந்தச் சூழ்நிலையில் தேச வழமைச் சட்டம் பற்றிய சரியான நிலைப்பாட்டை விளக்கும் விதத்தில் இப்பேட்டியை இங்கு பிரசுரிக்கிறோம்.

பேட்டி அளித்தவர் பிரபல சட்டத்தரணி திரு.ஆர்.ஈ.தம்பிரட்ணம், சட்டத்துறையில் நிரம்பிய புலமைபெற்ற திரு. ஆர். ஈ. தம்பிரட்ணம் அவர்கள் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. இங்கிலாந்தில் பட்டம் பெற்ற பொறியியலாளர். அத்தோடு ஒரு லண்டன் பரிஸ்டர்.

தேச வழமைச்சட்டம் பற்றி அவர் அளித்த பேட்டி இதோ:-

கேள்வி: தேச வழமைச் சட்டம் எப்படி, எப்போது உருவானது?

பதில்: யாழ் பிரதேசத்தில் வசிக்கும் தமிழர்கள் சம்பந்தப்பட்ட மரபு ரீதியான சட்டக்கோவை தேசவழமை. திராவிட இன மக்களிடையே நிலவிய மரபுகளின் அடிப்படையில் தேசவழமைச் சட்டம்எழுந்திருக்கலாம்.

1704 ஆம் ஆண்டில் டச்சுக்கார கவர்னர் சைமன்ஸ் யாழ்ப்பாண மக்களின் பழக்க வழக்கங்களைத் தொகுத்துத் தருமாறு பணிப்புரை வழங்கினர்.

ஐசாக்ஸ் என்பார் இப் பழக்க வழக்கங்களைத் தொகுத்த பின்னர் யாழ் பிரதேசத்தைச் சேர்ந்த 12 முதலியார்களிடம் இவ்வறிக்கை அனுப்பப்பட்டது

அந்த அறிக்கை கூறிய பழக்கவழக்கங்கள் இப் பிரதேசத் தமிழர்கள் மத்தியில் நிலவுவதாக இப் பன்னிரண்டு முதலிகளும் கைச்சாத்திட்டனர்.

அதன் பின்னர் 1708 இல் இவ்வறிக்கை டச்சுக்கார கவர்னரால் சட்டமாகப் பிரகடனப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இது சட்ட வலுப் பெற்றது.

1806இல் பிரித்தானிய அரசும் இதனை 18 ஆம் சரத்து என்று(Regulation 18 of 1806) பிரகடனஞ் செய்து சட்டவலு வழங்கியது.

யாழ்ப்பாணத் தமிழர்கள் மத்தியில் எழும் பிரச்சினைகளை அல்லது யாழ்ப்பாணத் தமிழர்கள் சம்பந்தப்படும் பிரச்சினைகளை தேசவழமைச் சட்ட அடிப்படையில் ஆராய்ந்து தீர்ப்பளிக்க வேண்டும் என்பது இப் பிரகடனமாக அமைந்தது.

அண்மைக் காலங்களில் தேச வழமைச் சட்டத்தில் சில மாற்றங்கள் இடம் பெற்றன

கேள்வி: தேச வழமைச் சட்டம் நாட்டில் எந்தப் பகுதிகளில் செல்லுபடியாகும்?

பதில்: யாழ்ப்பாண மாகாணத்தில் நிரந்தரமாக வாழும் தமிழர்களையும் அல்லது இப் பகுதியில் வாழாத போதும் இப்பகுதியில் வாழும் தமிழர்களை நீ திருமணஞ் செய்த பெண்களையும் இச்சட்டம் உள்ளடக்கும்.

யாழ்ப்பாண மாகாணம் என்று தேச வழமைச்சட்டம் குறிப்பிடும் பகுதி மன்னார், முல்லைத்தீவு ஆகியவற்றை உள்ளடக்கும்.

கேள்வி: தேசவழமைச் சட்டத்தினைப் பல்வேறு கோணங்களில் விளக்குவீர்களா?

தேச வழமைச் சட்டம் இப்பகுதியில் உள்ள காணிகளை எவ்வாறு குடும்பங்களுக்கு இடையே பகிர்ந்து கொள்ள வேண்டும் எந்த அடிப்படையில் விற்பனை செய்யலாம் என்று வரைவிலக்கணஞ் செய்கிறது

தேடிய தேட்டம் என்ற நீதிக் கருதுகோள் தேசவழமைச் சட்டத்தில் இருப்பதைக் காணலாம். இத்தேடிய தேட்டம் எவ்வாறு ஏனையோரைச் சென்றடையலாம் என்றும் இச்சட்டம் பேசுகிறது.

சொத்துரிமையாளர் உயில் எழுதி வைக்காது மரணம் அடையும் போது இடைக்காலத்திலும் குழந்தைகள் இல்லாத போதும் எப்படி சொத்துரிமை சென்று அடையும் என்று தேசவழமைச் சட்டம் வரைவிலக்கணஞ் செய்துள்ளது.

சீதனம் மணமகளின் புறம்பான சொத்து. கணவன் அதன் முகாமையாளர் என்ற நிலையும் தேசவழமைச் சட்டத்தில் காணப்படுகிறது.

## நிரந்தரமாக வசிக்காத தமிழர்தானும் காணிவாங்குவதற்கு நிபந்தனைகள் உண்டு

மா, பலா போன்ற மரங்களின் கிளைகள் அயலார் வளவினுள் சென்றால் அக்கிளைகளில் உள்ள காய் கனிகளை மரம் நிற்கும் காணி உரிமையாளர் பெற முடியும். ஆனால் இலுப்பை, புளி போன்ற மரங்களின் கிளைகள் அயலார் வளவினுள் சென்றால் அவற்றின் பலாபலன்களை அயலார் பெற முடியும் என்பதும் இச்சட்டவரையறை ஆகும்.

சொத்துடைய காணிகளை பொறுத்த அளவில் ஒன்றுக்கு மேற்பட்ட உரிமையாளர்கள் இருப்பார்கள். ஒருவர் உயில் எழுதி வைக்காது இறப்பின் அக்காணி விற்பனையின் போது குடும்பத்தவர்களுக்குச் சில முன்னுரிமைகள் உண்டு, அவற்றிலும் கூட வாங்க விரும்புபவரின் விலை அல்லது சந்தைவிலை அடிப்படையில் அக்காணியை வாங்க வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு.

கேள்வி:- தேசவழமைச் சட்டத்தில் இன ரீதியான பாகுபாடு ஏதேனும் உண்டா?

பதில்:- தேசவழமைச் சட்டம் இன ரீதியானது என்ற வாதம் விசித்திரமானது அதுவும் சட்டம் பயின்றவர்கள் இவ்வாறு பேசுவது ஆச்சரியத்தைத் தருகிறது

குறிப்பிட்ட இனத்தவர்கள் மட்டுமே காணி வாங்கலாம் என்று இச் சட்டத்தில் எங்கும் கூறப்படவில்லை.

காணி வாங்குவதில் இங்கு நிலவிய மரபினை இச்சட்டம் வலியுறுத்துகிறது யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வசிக்காத யாழ்ப்பாணத் தமிழர்களைப் பொறுத்த அளவில்கூட சில நிபந்தனைகள் உண்டு. அவர்களும் சிங்கள மக்களைப் போன்ற நடைமுறையை கையாள வேண்டும்.

இந்த நிலையில் தேச வழமைச் சட்டம் சிங்கள மக்களைக் காணி வாங்கத் தடை செய்கிறது என்பது வெறும் புனையுரை ஆகும். அதில் எவ்வித உண்மையும் இல்லை.

தேசவழமைச் சட்டம் பிரதேச மரபுகளைப் பிரதிபலிக்கும் சட்டம். அதே போன்ற ஏனைய சட்டங்களும் இலங்கை சட்டக் கோவையில் உள்ளன. கண்டியச் சட்டம், இஸ்லாமியச் சட்டம் ஆகியவற்றை உதாரணமாகக் கூறலாம். அப்படியிருக்க தேசவழமைச் சட்டத்துக்கு மட்டும் இப்படி ஒரு வாதம் முன்வைக்கப் படுவது ஏனோ புரியவில்லை.

இவற்றை விட தேச வழமைச் சட்டம் கலாசார ரீதியாகவும் தமிழ் மக்களுக்கு முக்கியத்துவம்வாய்ந்தது பெண்ணின் நலனுடன் சம்பந்தம் உடையது.

உறவினர் ஏனையோர் முன்னிலையில் உரிய பூசை நடத்தி, கூறை உடுத்தி தாலி கட்டினால், திருமணப் பதிவு இடம் பெறுவிடத்தும் கூட தேச வழமைச் சட்டத்தின் கீழ் அத்திருமணம் சட்ட ரீதியானது ஆகிறது.

இவ்வாறு யாழ். பிரதேச தமிழ் மக்களின் வாழ்வில் இழையோடும் கலாசார பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கியது தேசவழமைச் சட்டம். அது நம்மால் பேணப்பட வேண்டியது.

கருத்து: சட்டத்தரணி ஆர். ஈ தம்பிரட்ணம்

- எழுத்து: வி. வரதசுந்தரம் -

# சீதனம் கொடுத்து ஆண்களை விலைக்குவாங்கிபெண்ணடிமைத்தனம்!

## படித்த பெண் தானும் புதுமையாகச் சிந்திக்கவில்லையே!

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ் கிளை ஏற்பாடு செய்த பெண்ணிலைவாத கருத்தரங்கில் நிகழ்ந்த சிறப்புரை சென்ற வாரம் வெளியாகியது.

கருத்தரங்கில் வழங்கப்பட்ட மாற்றுக் கருத்துரைகளை வாசகருக்குத்தொடர்ந்து வழங்க எண்ணியுள்ளோம்;

இம்முறை கலாநிதி சபா. ஜெயராஜா, திருமதி பத்மா சோமகாந்தன் ஆகியோரின் கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.

– ஆசிரியர் –

பெண்ணிலைவாதக் கருத்துக்கள் சிந்தனைகள் பெண்கள் மத்தியில் மட்டுமல்லாமல் சமூகத்தின் சகல மட்டங்களிலும் பரவ வேண்டும்.

ஆனால் இத்தகைய கருத்துப் பரிமாற்றம் சார்புடையதாக இருப்பின் சமுதாயத்துக்குப் பயன் தராது.

ஆண் ஆதிக்கம் போன்று பெண்ணடிக்கம் இருப்பதையும் நாம் மறப்பதற்கில்லை. புறநடைகள் யதார்த்தம் ஆவது இல்லை என்று அதனை நாம் உதாசீனஞ் செய்யமுடியாது. புறநடைகள் உருவாக ஒரு சூழ்நிலை நிலவுகிறது என்பது தான் உண்மை நிலை.

திருமணத்தின் பொழுது ஒரு பெண் சீதனத்துடன் வருகிறாள். அப்போது சீதனத்தைக் கொடுக்கும் பெண், தனது கணவனை விலைக்கு வாங்கி விடுகிறாள். ஆணை ஆட்டிப் படைக்கும் நிலைக்கு இந்தச் சொத்துரிமை வழி தேடுகிறது. சொத்துரிமை காரணமாகப் பெண்ணடிக்க நிலை உருவாகிறது

எனவே சீதனக் கொடுமையால் பல வறிய பெண்களுக்கு வாழ்க்கைகிடைக்கவில்லையே என்ற நிலை ஒருபுறம். ஆனால் அதே சீதன முறையால் பெண்ணடிக்கம் உருவாகிக் குடும்ப, சமூக ஆரோக்கியத்தைச் சீர்குலைக்கிறது. இது நாணயத்தின் மறுபுறம்.

பெண்கள் கடின உழைப்பில் ஈடுபடுவதாகப் பெரிதாகப் பேசப்படுகிறது. வீட்டில் வேலைப் பளு என்றெல்லாம் வீட்டு வேலைகளை அட்டவணைப்படுத்திக் கூறுகிறார்கள். வேலைகள் செய்து உடல்நலம் குன்றி மரணத்தைத்தழுவுகிறார்கள் என்று சொல்கிறார்கள். இது ஆராயப்பட வேண்டியது.

ஆண்களைவிடப் பெண்கள் அதிக காலம் உயிர் வாழ்கிறார்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை Life expectan- -cy பெண்களுக்கு அதிகம். எனவே வேலைப்பளு அவளுடைய ஆயுளைக் குறைக்கவில்லை.

மாறாகப் புறவுலகிலே பல்வேறு துறைகளிலும் பொருளீட்டல் காரணமாகக் கடின உழைப்பில் ஈடுபடும் ஆணின் ஆயுள் குறைவாக இருக்கிறது. வேலைப்பளு அவனுக்கும் உண்டு. கடின உழைப்பு ஒருதலைப்பட்சமானது அல்ல.

— கலாநிதி. சபா. ஜெயராஜா.

### பெண்ணிலை வாதம்

பெண்ணிலை வாதக் கருத்துக்களை ஆராயும் போது எமக்கு ஒன்று புலனாகிறது. நமது பெண்கள் புதுமையாகச் சிந்திக்கிறார்கள் இல்லை. அப்படிச் சிந்திக்கத் தயக்கம் காட்டுகிறார்கள்.

உணவுகள் படைப்பதிலே, உடைகளைத் தைப்பதிலே, வீட்டினை அலங்கரிப்பதிலே புதுமையை நாடும் மங்கையர்கள், ஏனோ தெரியவில்லை சிந்தனையில் புதுமையை நாடுவதில்லை.

படித்த பெண்கள் கூடப் புதுமையாகச் சிந்திக்க மறுக்கிறார்கள். மூடக் கொள்கைகள் இவர்களை இன்னும் கவரத்தான் செய்கின்றன; இவர்களின் சிந்தனையில் புதுமை வேண்டும். சிந்தனை பிறக்குமானால், அவரது சிந்தனையில் புதுமை பிறக்குமானால் பெண்களின் சமூக நிலை மாற்றத்துக்கு வழி பிறக்கும்.

மங்கையரின் பிற்போக்குச் சிந்தனைக்கு இந்தியாவில் இருந்து உதாரணம் காணலாம். எவ்வளவோ போராட்டங்கள் மூலம் ஒழிக்கப்பட்ட உடன்கட்டை ஏறும் முறையைச் சட்டபூர்வமாக்கும்படி இந்தியப் பெண்கள் கோரிக்கை விடுத்திருப்பதைப் பாருங்கள்.

இது ஆண்களின் கோரிக்கை அல்ல, பெண்களின் கோரிக்கை என்பது அதிர்ச்சியைத் தருமல்லவா? எனவே பெண்ணிலைவாதத்தை முன்னெடுத்துச் செல்லும் போது பெண்களின் சிந்தனைப் போக்கை மாற்ற வேண்டும்.

— திருமதி. பத்மா சோமகாந்தன் (அதிபர், நல்லூர் சாதனா பாடசாலை)

சர்ச்சை சக்கரம்

# தெரிந்து செய்த தவறைக்கூட உணர்ந்து திருந்தினால் மன்னிப்பு

## அகலிகை அனுபவம் இதனை உணர்த்துகிறது

இந்திரன் அகலிகையின் பேரழகில் மயங்கி கௌதம முனிவருடைய வேடம் தாங்கி ஆசிரமத்தினுள் சென்றான். அவன் தனது இச்சைக்கு அகலிகையை உட்படுத்தினான். இது அவன் செய்த தவறு.

அகலிகை கௌதம முனிவரின் மனைவி அவள் முனிவர் வேடத்தில் வந்தது தனது கணவர் இல்லை என்பதை உணர்ந்தாள். ஆனால் அவளது அழகின் கர்வம் விடவில்லை. தனது பேரழகில் மயங்கி தேவேந்திரனே தன்னிடம் வந்து விட்டான் என மட்டுமே எண்ணினாள். அதனால் இந்திரன் கேட்ட மாத்திரமே அவனின் விருப்பத்திற்கு உடன்பட்டு விட்டாள். ஒருவரின் மனைவி இவ்வாறு பிறர் தன் அழகின் மீது ஆசை வைத்தமையால் தவறாக நடந்து கொள்ள இடங்கொடுக்கலாமா? அதுவுமின்றி தொட்டுத் தாலி கட்டிய கணவனுக்குத் துரோகமாக இந்திரன் கேட்ட மாத்திரத்தில் கூடுவதற்கு இணங்கலாமா?

அகலிகை திமிறவில்லை, குரல் வைக்கவில்லை. ஆர்ப்பாட்டங்கள் எதுவுமே செய்யவில்லை. தனது அழகின் கர்வத்தினால் மதி மயங்கித்தன்னை இந்திரனுக்கே அர்ப்பணித்து விட்டாள். இந்திரன் நன்றி கூறிய போதும் தேவேந்திரனின் நலனைக் கருதி 'சீக்கிரம் அப்புறப்பட்டுப் போ. உனக்கு வரும் அபாயத்திலின்று எப்படியாவது காப்பாற்றிக் கொள்' என்று தான் கூறினாள். கௌதம முனிவர் தற்செயலாக வந்தமையாலேயே இந்திரனைக் கண்டார். அதனாலேயே சாபங்களை வழங்கினார். அப்படிக் காணாது விடத்து இது தொடர் கதையாகி வரலாறே மாறியிருக்கும்.

இந்திரன் அகலிகையைப் பலாத்காரம் செய்யவில்லை. இருவரும் கருத்தொருமித்து விருப்பத்திற்கிணங்கவே கூடினார்கள். இதிலிருந்து அகலிகை சில வேளையில் இந்திரனின் பேரழகில் மயங்கித் தனது கற்பை இழந்திருக்கலாம் எனவும் எண்ணத் தோன்றுகிறது.

இந்திரன் பிறன்மனை விழைந்தமை தவறுதான். அகலிகை தன் கற்பை நிறை காக்காமல் இழந்தமை குற்றம். கௌதம முனிவர் சிறை காத்திருந்தால் அகலிகை கற்பிழந்திருக்கமாட்டாள்.

இவ்வாறு நெறி தவறிய அகலிகைக்கு கௌதமர் வழங்கிய தண்டனை, சாபம், சாலப் பொருந்தும். அவளின் புற அழகை சாம்பல் மேல் படுத்து யார் கண்ணுக்கும் தெரியாமல் வசிப்பாயாக என்பதன் மூலம் முனிவர் அழிக்க முயன்றுள்ளார். அழகின் ஆபத்து அனைவருக்கும் ஒரு பாடமாக அமைந்துள்ளது.

கௌதம முனிவர் தமது ஸ்நான ஜபங்கள் முடித்துக் கொண்டு ஆசிரமத்தை அடைந்த போது முனிவரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு வெளியேறிய இந்திரனைக் கண்டார். கோபமிகுதியால் 'மூடனே! என் வேஷத்தைத் தரித்துக் கொண்டு ஆசிரமத்துக்குள் புகுந்து தகாததைச் செய்தாய். நீ நம்புசகனாய்ப் போவாய், என்று சபித்தார். முனிவர் அவ்வாறு சபித்ததும் அக்கணமே இந்திரன் தன் ஆண்மையை இழந்தான்.

கௌதம முனிவர் தம் மனைவிக்கும் பிராயச்சித்தம் விதித்தார் 'அகலிகையே! நீ காற்றே உணவாக ஆகாரமின்றி சாம்பல் மேல் படுத்து யார் கண்ணுக்கும் தெரியாமல் மறைந்து வசிப்பாயாக இவ்விடம் தசரத ராமன் ஒரு நாள் வருவான். அவன் கால் வைக்கும் போது உன் பாவம் நீங்கும். நீ அவனை வரவேற்று உபசரிப்பாய் அப்போது உன் இயற்கைக் குணத்தையும் காந்தியையும் மறுபடியும் அடைந்து என்னுடன் வாழ்வாய்' என்றார். கௌதம முனிவர் நெறி தவறிய மனைவியை விட்டுவிலகி இமயமலை சென்று தவமிருந்தார்.

ஜனகராஜனுடைய நகரத்துக்கு அண்மையில் மிக ரம்மியமான ஓர் ஆசிரமம் இருந்தது. இதனைக் கண்ட "இராமபிரான் முனிவர் யாரும் வாசம் செய்யாத இப் புராதன ஆசிரமம் யாருடையது? என்று வினவினான்.

ஆசிரமத்திற்கு ஒரு சாபம் இருக்கிறது என்று பதில் கூறிய விசுவாமித்திரர், அகலிகையின் சரித்திரத்தை இராமருக்கு இயம்பினார்.

ஆசிரமத்துள்நாம்செல்வோம் திக்கற்ற அகலிகைக்கு நீ விமோசனம் தருவாய்' என விசுவாமித்திர முனிவர் கூறினார்.

இராமன் ஆசிரமத்தின் உள்ளே கால் வைத்ததும் அகலிகையின் பாவம் தீர்ந்தது. அகலிகை உலகத்திலுள்ள எல்லாப் பெண்களிலும் அழகானவள். பிரம்மாவினால் படைக்கப்பட்ட தனி அழகுடையவள். இராமன் ஆசிரமத்துக்குள் சென்றபோது அகலிகையின் அழகு பனியால் மூடப்பட்ட சந்திரனைப் போலவும், புகையால் மறைக்கப்பட்ட அக்கினி சுவாலையைப் போலவும், அசையும் ஜலத்தில் காணப்படும் சூரியபிம்பம் போலவும் காட்சியளித்தது.

ஒருவன் அல்லது ஒருத்தி எவ்வளவு பெரிய பாபத்தை செய்து விட்டாலும் தண்டனையைப் பொறுத்துத் தவமிருந்தால் விடுதலை அடையலாம் என்பது அகலிகையின் நிகழ்ச்சி தந்த பாடம் எனலாம்.

கௌதமர் கற்பிழந்த தன் மனைவியைச் சபித்தார். ஆனால் அம்மனைவியை இராமன் காற்பாதம் ஆசிரமத்தினுள் பட்டதும் ஏற்றுக்கொள்கிறார்.

இராமனும் இலக்குமணனும் முனி பத்தினியின் பாதங்களைத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

பா. இரகுநாதன்

# உலக சமாதானத்திற்கு சவால்; புது ஆண்டில் புரட்சி, வன்முறை

## சோதிடம் கூறும் பலன் இது

எதிர்வரும் 14-4-1986 திங்கட்கிழமை பிறக்கவிருக்கும் அக்ஷய புத்தாண்டு அளிக்கவிருக்கும் பலன் எப்படியிருக்கும் என்பது பற்றி நோக்குவோம். அக்ஷய வருஷத்தில் பருத்தி, வாசனைப்பொருள், எண்ணெய், தேன், கரும்பு, தானியம் ஆகியவை அழிவடைவதுடன் மக்களும் நலிவுற்று வாழ்வார்கள். சம மழையும் தன தான்ய விருத்தியும் உண்டாகும்.

விளைச்சல் அதிகமாக இருந்தாலும் வருட இறுதியில் சாகுபடி குறையும். கர்ப்பிணிகள் சுகப் பிரசவம்; அக்கினி, ஆயுத, விஷபயம்; அந்நிய நாட்டுத் தொடர்புகள் சீர்குலையும் அத்துடன் பணப் பெறுமதி குறையும்; பண வீக்கம் அதிகரிக்கும்.

முக்கியமாக இந்த ஆண்டு அரசியலில் மாறுதல் நிகழும். அதுவுமன்றி உட்பூசல்கள் அதிகரிக்கும். தேயிலையின் வியாபாரச் சந்தை இறங்கும். தெங்குப் [illegible] இருக்கும். அந்நிய நாடுகளின் [illegible] இலங்கை அதிகம் தங்கியிருக்கும்.

மேலும் அரச உயர் பதவிக்குப் போட்டியும் அபிவிருத்தி வேலைகள் தாமதமும் ஏற்படும். உணவு இறக்குமதி அதிகரிப்பதோடு வல்லரசுகளின் கெடுபிடியும் கூடும்.

இந்த ஆண்டு சங்கீதம், நடனம் முதலான கலை விருத்திக்கு வழி செய்யும்.

இந்த அக்ஷய வருஷத்தில் யாவற்றையும் சீர் [illegible] பலம் 5 பங்கும் தீப்பலன் 4 பங்குமாம் என்று இ. வெங்கடேச ஐயரால் கணிக்கப்பெற்ற வாக்கிய பஞ்சாங்கம் கூறுகிறது.

மேலும், சனி பகவான் வருடம் முழுவதும் விருச்சிக ராசியில் சஞ்சரிப்பதால் மக்களுக்கு ரோகபயமும் பசுக்களுக்குக் கேடும் எழுத்து வேலையாளர், சாரதிகள் முதலானோருக்கு பீடைகளும் உண்டு என்று அதில் கூறப்படுகிறது.

குருபகவான் தை 18 வரை கும்பராசியில் நிற்பதால் நல்ல மழையும் விளைவும் தேச சௌக்கியமும் உண்டாம்.

தை 19 முதல் வருட முடிவு வரை மீனராசியில் நிற்பதால் மழை வளமும் விசேஷ விருத்தியும்.

(8-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைப் பறவைகள்

து. வைத்திலிங்கம்



## (அத்தியாயம் - 10)

உலகம் ஓய்ந்து விடவில்லை வழமைபோல் முருகன் கோயில் மணி அடித்தது

ஆனால் எதுவித பரபரப்புமின்றி மெதுவாக எழுந்து வந்தாள் திலகம். வழக்கமாக தன் உள்ளங்கையையோ கண்ணாடியையோ இன்று பார்க்கவில்லை. பார்க்க மனம் விழையவில்லை. இயந்திரம் மாதிரி நடந்தாள். படுக்கையறை லைற் மின்னலடித்தது. அதை அவள் பார்க்காமலேயே வெளியே சென்றாள்.

நடு அறை லைற்றை எரிய விட்டு, அதன் வெளிச்சத்தில் கிணற்றடிக்குச் செல்லும் வெளிக்கதவைத் திறந்தாள். ஏதோ இனம் புரியாத சத்தங்கள் வெளியே கேட்டு அவளைத் திடுக்கிட வைத்தன. தூரத்தில் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. திலகத்தின் நெஞ்சு துணுக்குற்றது பின்பக்க வீட்டுச்சுவரைத் தாண்டி யாரோ ஒரு உருவம் மாட்டுக்கொட்டிலடியை நோக்கி ஓடுவது அந்த மையிருட்டிலும் நன்கு தெரிந்தது. தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகக் கேட்டன. திலகம் ஓடிவந்து நடு அறை லைற்றை அணைத்து விட்டு சுவரோடு சுவராக நின்றாள். அவளின் மெல்லிய தேகம் நடுங்கியது துப்பாக்கி வேட்டுக்களைத் தொடர்ந்து, காதைப் பிளக்கும் பேரிரைச்சலுடன் கனரக வாகனங்கள் வீதியால்தொடர்ந்து சென்றன. வீடே அதிர்ந்த மாதிரி இருந்தது.

வாகனங்கள் ஒவ்வொன்றாகச் சென்று சத்தங்கள் ஓய்ந்த பின்னும் திலகத்தின் நடுக்கம் குறையவில்லை. அவளது தம்பி சந்திரனின் முகம் அடிக்கடி தோன்றி மறைந்தது.

'கடவுளே எங்கே நிற்கிறானோ! என்ன செய்கிறானோ? முருகா அவனுக்கு ஒன்றும் வராமல் காப்பாற்று!'

திலகத்தின் கண்கள் கலங்கி குளமாகின.

மாட்டடியில் பசு குரல் கொடுத்தது. மடி சுரந்து நோ எடுத்ததோ என்னவோ? பால் கறக்கும் மணிக்கணக்கு அதற்கு அத்துப்படி.

அதற்கு அதன் கவலை. வாயில்லா ஜீவன். அது வேறென்ன செய்யும்!

ஆனால், திலகம் பயப்பிராந்தியால் ஒன்றும் செய்யத் தோன்றாமல் மறுபடியும் போய் படுக்கையில் சாய்ந்தாள்.

இனம் தெரியாத பயம் ஒன்று மெல்ல மெல்ல எழுந்து அவளின் தேகம் எங்கும் வியாபித்தது.

முருகன் கோயில் பக்கம் பெரிய குண்டுச் சத்தங்களும், இடைக்கிடை சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகளும் கேட்டன.

'கடவுளே! கடவுளே!'

இதைத்தவிர வேறொன்றும் திலகத்தால் சொல்ல முடியவில்லை.

காலை ஆறுமணியாகி விட்டது. சத்தங்கள் ஓய்ந்ததும் திலகம் இயந்திரம் மாதிரி எழுந்து மெதுவாக வழமையான காரியங்களைக் கவனித்தாள்

தேநீர் கசந்தது.

தேநீர் மட்டுமா?

இந்த உலகமே கசந்தது

'எங்கையப்பா தேத்தண்ணி!'

கட்டைக்குரலில் கத்தினார் கனகசபை.

பூரணம் தேநீரை எடுத்துக் கொண்டுபோய் அவரிடம் கொடுக்க, அவர் மெதுவாக ரசித்துக் குடித்துக் கொண்டிருந்தார்

'பூரணம்! எடி பூரணம்!'

கற்பகம் ஓட்டமும் நடையுமாய் வெளிக்கேற்றைத் திறந்து கொண்டு ஓடி வந்தாள்.

'எடி பூரணம் உனக்குச் சங்கதி தெரியுமே...?'

கிழவியின் முகம் பேயறைந்தது மாதிரி இருந்தது

'என்ன அக்கா... என்ன நடந்தது?'

பூரணம் திடுக்கிட்டுக் கேட்டாள்.

இதற்குள் கற்பகத்தின் குரலைக் கேட்டுத் திலகமும் வெளியே வந்தாள்.

'ஐயோ, எங்கடை கோவிலடி வாத்தியாற்றை மகன் சிவநேசனை ஆமிக்காரர் சுட்டுப் போட்டினம்! பெடியன் வீட்டு வாசலில் செத்துப்போய்க் கிடக்கிறான் தாய் தகப்பன் கத்திக் கொண்டு நிற்கினம்! கண்கொண்டு அந்தப் பரிதாபத்தைப் பார்க்க ஏலாமல் தான் இஞ்சை ஓடி வந்தனான்!

'ஐயோ கடவுளே...!'

பூரணம் தலையில் கை வைத்தாள்.

'என்ரை ஐயோ...!'

கத்திக் கொண்டே மரம் விழுந்த மாதிரி திலகமும் கீழே விழுந்தாள். அவள் கத்திய சத்தமும், கீழே விழுந்த சத்தமும் கேட்டு, பூரணம் திரும்பிப் பார்த்தாள்.

மகள் விழுந்து கிடந்த கோலத்தைக் கண்டதும் துடித்துப் பதைத்துக் கிட்ட ஓடி வந்தாள்.

'ஐயோ இஞ்சை ஒருக்கா ஓடி வாருங்கோ'

பூரணம் கனகசபை நின்ற இடத்தைப் பார்த்துக் கத்தினாள்.

'என்னப்பா கத்துறாய்'

கனகசபை ஆறுதலாய் நடந்து வந்தார்.

அடியற்றமரம் மரம் போல திலகம் அலங்கோலமாக கீழே வீழ்ந்து கிடந்தாள் கண்கள் மேலே விழித்துப் பார்த்தபடி இருந்தன.

'கொஞ்சம் தண்ணி கொண்டாடி பூரணம்!'

கற்பகம் கூற, பூரணம் ஓடிப்போய் செம்பில் தண்ணீரைக் கொண்டு வந்தாள். அதைக் கற்பகம் வேண்டி திலகத்தின் முகத்தில் அடித்துத் தெளித்தாள்

'திலகம்! எடி திலகம்! இஞ்சை பாரடி!'

பூரணம் கண்ணீர் சிந்தியபடியே திலகத்தின் முகத்தை தன் கைகளால் இரண்டு பக்கமும் ஆட்டினாள்.

ஆனால், திலகம் இந்தக் கேடுகெட்ட உலகத்தை இனித் திரும்பிப் பார்க்க மாட்டாள்.

இந்த அர்த்தமில்லாத, வீணான கட்டுப்பாடுகள், நெருக்கடிகள் நிறைந்த இந்த உலகத்துச் சிறையிலிருந்து அவள் விடுபட்டு சுதந்திரப் பறவையாய் பறந்து போய் பல கணங்களாகி விட்டனவே!

ஒருவேளை சிவனேசனின் ஆவியும் திலகத்தின் ஆவியும் சுதந்திரமான காற்றை நிச்சயமாக அனுபவிக்கத்தான் செய்யுமோ?

- முற்றும் -

(சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே.)

## (இரு மாத குறுநாவல்)

'சஞ்சீவி'யில் தொடர்ந்து வெளிவந்து உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட சிறைப் பறவைகள் குறு நாவல் இவ்வாரத்துடன் நிறைவு பெறுகிறது.

இதன் ஆசிரியர் திரு து. வைத்திலிங்கம் இலங்கை நிர்வாக சேவை அதிகாரி சங்கானைப் பிரிவு உதவி அரசாங்க அதிபராக இப்பொழுது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

1965 ஆம் ஆண்டு ஓர் இளம் எழுத்தாளராக முளை கொண்ட திரு. து வைத்திலிங்கம் தமது தொடர்ந்த படைப்பிலக்கியப் பணிகளால் பண்பட்ட எழுத்தாளராகப் பரிணமித்த பெருமைக்குரியவர்.

சுதந்திரனில் தமது எழுத்துலகப் பயணத்தை ஆரம்பித்தவர் திரு. து வைத்திலிங்கம்.

வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, ஈழநாடு ஆகிய நாளிதழ்களும் சிரித்திரன், விவேகி ஆகிய சஞ்சிகைகளும் அவரது படைப்புகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தன.

சிரித்திரன் நடத்திய சிறுகதைப் போட்டியிலும் யாழ் இலக்கிய வட்டமும் ஈழநாடும் இணைந்து நடத்திய இரசிகமணி கனக செந்திநாதன் ஞாபகார்த்த குறுநாவல் போட்டியிலும் பங்கு கொண்டு முதற்பரிசுகளைப் பெற்றார் அவர்.

மண்ணின் குழந்தைகள், பூப்பனி மலர்கள் ஆகிய இவரது நாவல்கள் வாசகர்களின் ஆதரவைப் பெற்றுப் புகழ் கொண்டன.

பிரதேச மண் வாசனையையும், மக்களின் அன்றாட பிரச்சினைகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் மையமாக வைத்து எழுத விரும்பும் இந்த எழுத்தாளர் நகைச்சுவை இழையோட ஆக்கங்கள் புனைவதிலும் ஆர்வம் மிகக் கொண்டவர்.

எழுத்துலகில் பிரவேசித்த காலத்தில்



இருந்து அவர் 80 சிறுகதைகளையும், பல கட்டுரைகளையும், இரண்டு நாவல்களையும், ஒரு குறுநாவலையும் படைத்துள்ளார்.

'சிறைப்பறவைகள்' அவரது இரண்டாவது குறுநாவல்.

சஞ்சீவி கருக்கொண்ட போதே அதற்குக் குறுநாவல் எழுதுமாறு நாம் விடுத்த விண்ணப்பத்துக்கு, தயங்காது ஆதரவு தந்த திரு. து. வை. அவர்களுக்கு உங்கள் சார்பில் எங்கள் நன்றிகள்.

பிரதம ஆசிரியர், 'சஞ்சீவி'

# இனத்தின் விடுதலைக்காக 22 ஆண்டுகள் சிறையில்!

## மண்டேலா எப்போது விடுதலையாவார்?

விடுதலை வேட்கை கொண்ட நேருவின் புகழ் பூத்த பேச்சினை மேற்கோள் காட்டினான் கறுப்பின விடுதலைப் போராளி ஒருவன். அதனாலே அப்போராளி தேசத் துரோகக் குற்றச்சாட்டினை முகம் கொடுத்து நாலு ஆண்டுகள் சிறையில் வாடினான்.

அப்போராளி வேறு யாருமல்லர். தென்னாபிரிக்க மக்கள் தலைவர் நெல்சன் மண்டேலா தான். அவருக்கு வாழ்க்கை ஒரு போராட்டம்.

பல்கலைக்கழகத்தில் பாடத்தேர்வைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்தை நடத்தியதால், அவர் வெளியேற்றப்பட்டார். அதனால் பட்டப்படிப்பை இழந்தார். எனினும் சட்டத்துறையில் பயின்று வழக்கறிஞரானார்.

1944 ஆம் ஆண்டில் 26 வயதில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் சேர்ந்து விடுதலைப் போராளி ஆனார். அவ்வியக்கத்தின் தலைவரானார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அவரது தலைமையில் இனவாதச் சட்டங்களைக் கண்டித்து, அவற்றை மீறுவது எனத் தீர்மானித்தது. அவருடைய தலைமையில் நடைபெற்ற சட்ட மறுப்பு இயக்கத்தில் 8500 கறுப்பின மக்கள் ஈடுபட்டனர்.

தென்னாபிரிக்க இனவாத அரசு மண்டேலாவை ஜோகன்னஸ்பேர்க்குக்கு வெளியே செல்லவிடாது தடுத்தது அப்போது நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்கு அவர் எழுதி அனுப்பிய தலைமைப் பேருரையில் நேருவின் பேச்சினை மேற்கோள் காட்டினார்.

''விர சுதந்திரம் வேண்டி நிற்பவர்கள் எவராயினும் சரி அதனை மிக எளிதில் பெற்றுவிட முடியாது.

விடுதலை என்ற மலையுச்சியை நாம் சென்று அடைய முன்னர் மரணத்தின் நிழலாகிய பள்ளத்தாக்கினை நாம் பன்முறை கடந்தாக வேண்டும்''

இதுவே நேருவின் பேச்சில் இருந்து எடுக்கப்பட்ட மேற்கோள். நேருவின் பேச்சினை மேற்கோள் காட்டி விடுதலைக்குத் துடிக்கும் கறுப்பின மக்களின் மன உறுதியைக் கட்டி எழுப்ப விரும்பினார் மண்டேலா

அதேவேளையில் உலக மக்கள் அபிப்பிராயத்தின் கவனத்தையும் இப்போராட்டத்தின்பால் ஈர்க்க விரும்பினார்.

இந்திய விடுதலை இயக்கம் கறுப்பின மக்களின் விடுதலை உணர்வுகளை எவ்வாறு வளம்படுத்தியது என்பதையும் உணர முடிகிறது.

இம்மேற்கோளைக் கையாண்டு மக்களை அரசுக்கு எதிராகத் தூண்டி விட்டார் என்று தேசத்துரோகக் குற்றச்சாட்டு இவர் மீது சுமத்தப்பட்டது.

மரணத்தின் நிழல் படர்ந்தபடி நாலு ஆண்டுகள் விசாரணை நடைபெற்று, ஈற்றில் விடுதலை ஆனார்.

பின்னர் 1960 இல் தென்னாபிரிக்கா ஒரு குடியரசாக வேண்டுமா என்ற பொதுசனவாக்கெடுப்பு நிகழ்ந்தது இவ்வாக்கெடுப்பில் வெள்ளையர்கள் மட்டுமே பங்கு பெறலாம் என்று தென்னாபிரிக்க இனவாத அரசு கட்டுப்பாடு விதித்தது.

இதனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார் மண்டேலா. 1962 இல் நாட்டை விட்டு வெளியேறினார். புதிதாக உருவான பல ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்றார் தென்னாபிரிக்கா திரும்பி சுமார் இரண்டு ஆண்டு தலைமறைவாக வாழ்ந்த பின் பொலீசாரால் கைது செய்யப்பட்டார்.

வழக்கு விசாரணையில் இப்போராளி நாலரை மணித்தியாலங்கள் தனது கருத்துக்களை வலியுறுத்தி வாதஞ் செய்தார்.

ஆனாலும் 1964 ஆம் ஆண்டு அவருக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. அன்று தொட்டு சுமார் 22 ஆண்டுகள் சிறையில் வாடுகிறார்.

இவரை விடுதலை செய்யுமாறு உலக நாடுகள் பல வேண்டுகோள் விடுத்துள்ளன.

தனது பாட்டனாரின் கருத்துக்களை நேசித்த தென்னாபிரிக்க மக்கள் தலைவனை விடுதலை செய்யுமாறு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் குரல் கொடுத்தார்.

இனவாத அரசுகள் நியாயமான கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பதில்லையே!

- சுந்தரனார் -

தேன்கூடு

### படிக்கும் பக்கங்கள்

நல்ல படிப்பாளி ஒரு ஆண்டுக்கு 2000 பக்கங்கள் படிப்பவனாக இருக்கிறான் என்று யுனஸ்கோ அளவீடு ஒன்று தெரியப்படுத்துகிறது. ஆனால் இந்தியாவில் சராசரியாக ஒரு படிப்பாளி படிக்கும் மொத்தப் பக்கங்கள், ஆண்டுக்கு 32 தான்.

ஆதாரம் : நல்வழி

# உடையாத கண்ணாடி: கண்டுபிடித்த மர்மம்

இப்போதெல்லாம் மோட்டார்களில் உடையாத கண்ணாடியை உபயோகப்படுத்துகிறார்கள். இதன்மீது எவ்வளவு வேகமாக அடித்தாலும் சாதாரணக் கண்ணாடியைப் போல் துகள் துகளாகச் சிதறுது. தாக்குதல் பலமாக இருந்தால் சில விரிசல்கள்தான் ஏற்படும், அவ்வளவு தான்.

'புல்லட் ப்ரூப்' துப்பாக்கிக் குண்டுக்கும் உடையாத கண்ணாடி கூட வந்திருக்கிறது. அதைக் கண்டுபிடித்த விதம் விசித்திரமானது.

எடோயெர்ட் பெனெடிக்ஸ் என்னும் பிரபல விஞ்ஞானி பரிசோதனைக் கூடத்தில் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். இரசாயனக்கலவை வைத்திருந்த கண்ணாடி ஜாடி தற்செயலாக அவரது கைபட்டுக் கீழே விழுந்துவிட்டது. பல நாளைய ஆராய்ச்சியும் உழைப்பும் இப்படி வீணாகி விட்டனவே என்று நொந்து போனார் அவர்.

ஜாடி விழுந்த இடத்தைக் குனிந்து ஏக்கத்துடன் பார்த்தார். ஜாடி அப்படியே முழுசாக இருந்தது. உடனே அதை எடுத்து ஆராய்ந்தார். அதில் நைட்ரோ-செல்லுலோஸ் என்னும் தாவரப் பசை முன்பே உள்பக்கத்தில் பூசியிருந்ததால் தான் இந்த உறுதி ஜாடிக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்தார்.

பிறகு, பெனடிக்ஸ் ஒரு மெல்லிய கண்ணாடிப் பலகையை எடுத்து அதில் அந்தத் தாவரப் பசையைத் தடவினார். கொஞ்ச நேரங்கழித்து, ஒரு சுத்தியால் அந்தக் கண்ணாடியை ஓங்கி அடித்தார். அது உடையவில்லை.

தொடர்ந்து இந்தத் துறையில் அவர் ஆராய்ந்தார். முடிவில் 'மூன்றடுக்குப் பத்திரக் கண்ணாடி' என்ற திடமான கண்ணாடியை உபயோகத்திற்குக் கொண்டு வந்தார். இதன் புகழ் பரவவே, உயர்ரகக் கார்களிலும், இரசாயன ஆராய்ச்சிக் கூடங்களிலும் இந்த உடையாத கண்ணாடிக்கு ஏகக்கிராக்கி ஏற்படத் தொடங்கியது. பத்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் சிறந்த சாதனம் இந்தக் கண்ணாடி.

ஆதாரம்: மஞ்சரி
தொகுப்பு: க. கனகராசா

நகைச்சுவை நவீனம்

# வடக்கே போகும் ராமனுஜம்

★ திக்கவயல் ★

## அத்தியாயம் - 5

### ராமேஸ்வரத்தில் சில தமிழர்கள்

கப்பல் தண்ணிருடன் தண்ணிராக ஓடிக் கொண்டிருந்தது.

மேல் தட்டிலே அமர்ந்திருந்த இலங்கேசனின் டிக்கட்டை அவதானித்த அதிகாரி ஒருவர் அவனைக் கீழ்த்தட்டுக்குச் செல்லுமாறு கட்டளையிட்டார்.

கப்பலில் அவனுக்குக் கிடைத்தமுதல்மரியாதை இது.

அவன் கண்ட முதல் வர்க்கப் போராட்டமும் அதுதான்!

எப்போதும் தனக்குக் காந்திக் கிளாஸ்தான் என்பதை நினைத்துக் கொண்ட இலங்கேசன் மூட்டை முடிச்சுக்களுடன் மேல் தட்டிலிருந்து கீழ்த்தட்டுக்கு இறங்கிச் சென்றான்.

மொத்தமாக இருபத்து இரண்டுபடிகளைக் கடக்க வேண்டியிருந்தது

கம்பி எண்ணுவது கூட கப்பலில் பிரயாணம் செய்வதிலும் சுகம்போல அவன் மனநிலை பேசிக் கொண்டது.

கப்பலுக்குள் இருக்கும் கன்டீனில் தேநீர் குடிக்கலாம் என நினைத்த இலங்கேசன் அங்கு சென்றான்.

காற்சட்டைப் பொக்கெட்டில் தான் வைத்திருந்த இலங்கை நோட்டு ஐம்பதை எடுத்துச் சில சாப்பாடுகள் வாங்க நினைத்தான். இலங்கைத் தாளை நீட்டியதுமே இது இங்கே வாங்கப்படமாட்டாது எனக் கைகளை விரித்தார் கன்டீன் மனேஜர்.

இலங்கை — இந்தியா உறவில் எப்படி மரியாதை இருக்கின்றது என நினைந்தபோது அவனுக்குச் சிரிப்பே வந்தது.

மேலே அண்ணாந்து பார்த்துச் சிரித்தபோது ஒரு டொலர் இந்தியா ரூபா 8/50 என்றும் 1 [illegible] 17/50 என்றும் விளம்பரப்பலகை மாட்டி[illegible]ருந்தது.

ஒருதேநீர் குடிப்பதற்கு இந்தியாக்காசு கொஞ்சம் யாரிடமாவது வாங்கலாமா எனக் கப்பல் முழுவதும் தெரிந்தவர்களைத் தேடிச் சல்லடை போட்டான் இலங்கேசன்.

எவருமே அகப்படவில்லை.

எல்லோரும் மேல் தட்டு வர்க்கம்; நான் ஒருவன்தான் கீழ்த்தட்டு என்று இன்னொரு முறை தனக்குள் தானே சிரித்துக் கொண்டான்.

அப்போது கப்பலில் வேலை செய்யும் தொழிலாளி ஒருவர் அகப்பட்டார்.

கப்பலுக்குள்இலங்கை, இந்தியா ரூபாய்களை மாற்றி உழைப்பதில் அவர் வல்லவர் என்பது புரிந்தது.

இலங்கைக்காசு ஐம்பது ரூபாவை அவரிடம் கொடுத்தபோது இந்தியா ரூபாய் பதினைந்து மாத்திரம் பரிவர்த்தனையில் கிடைத்தது. அப்பட்டமான சுரண்டல்

இவனை மின்கம்பத்தில் தான் கட்டி வைக்கவேண்டும் என இலங்கேசனின் மனம் சொல்லிக் கொண்டது. ஆனால் இருப்பது யாழ்ப்பாணம் அல்ல நடுக்கடல் என நினைத்த போது, அவனுக்கு மனம் அலுத்துக் கொண்டது.

ஐந்து ரூபாவுக்கு 'கன்டீனில்' சாப்பிட்டு முடித்தான்.

மிகுதி பத்து.

அதற்கு அப்புறம் அவன் அங்கு நிற்க விரும்பவில்லை.

கப்பலில் ஒரு குட்டித் தூக்கம் போட்டான். கப்பலில் பிரயாணிகள் ஏதோ சத்தம் போடுவது கேட்டு எழுந்திருந்தான் இலங்கேஸ்.

இந்தியாக்கரை தெரிவதாகப் பலரும் பேசிக் கொண்டார்கள்.

இலங்கையில் இருந்து சில பொருள்களைக் கொண்டு வருவது, பின்பு இந்தியாவில் இருந்து சில பொருள்களை இலங்கைக்குக் கொண்டு போவது - சுங்கத்திணைக்களத்துக்கு லஞ்சமாக இறைப்பது - பின்பு இலாபத்தைக் கணக்கு எடுப்பது - நினைத்தாலே இதுவும் ஒரு வாழ்க்கையா என்று நினைக்கத் தோன்றியது அவனுக்கு.

இருந்தாலும் இந்த ராமனுஜம் கப்பல் ஓடாது விட்டால் எத்தனை அகதிகள் இலங்கையில் தலையில்லாமல் வாழ வேண்டிவரும்! எத்தனை ஏழைகள் வீட்டின் சமையற் கட்டில் பூனை படுத்து உறங்கும்!!

சட்டப்படி கடக்கின்றவை, கடத்தலில் போகின்றவை என்று இப்படி எத்தனை எத்தனை ரகங்கள்! இதையெல்லாம் நினைத்து சிரிப்பு ஒரு பக்கம்; சிந்தனை மறுபக்கம் அவனுக்கு. சிந்தனைக்கு மத்தியில் தானும் ஒரு வியாபாரிதான் என எண்ணியபோது இலங்கேசனுக்குக் கவலையாக இருந்தது.

பிரயாணிகள் அவசரப்பட்டு மேலும் கீழும் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

ராமேஸ்வரம் வந்து விட்டது.

கரைக்கு அருகில் கிட்டத்தட்ட 250 யார் தூரத்துக்கு அப்பால் ராமனுஜம் கப்பல்கட்டப்பட்டது. இந்த 250யார் தூரத்தையும் மீண்டும் சிறிய வள்ளங்களில் கடந்தே அக்கரை செல்ல வேண்டும்.

''சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்'' எனப் பாடிய இந்திய மக்களுக்கு இன்னும் விடியவில்லைப் போலும்.

மனதுக்குள் இன்னும் ஒரு முறை சிரிக்கவேண்டும் போல் இருந்தது அவனுக்கு.

பதினைந்து நிமிடங்கள் போயிருக்கும்.

ஒன்றன்பின் ஒன்றாகப் பிரயாணிகளை ஏற்றுவதற்காக வந்து கொண்டிருந்தன - வள்ளங்கள்.

மேற்தட்டுப் பிரயாணிகள் முதலிலே வள்ளங்களைப் பிடிக்கும் பாக்கியம் பெற்றனர்.

ஒரு மணிநேரம் பொறுத்தே கீழ்த்தட்டு வர்க்கத்தினர் வள்ளங்களில் இறங்கி அக்கரை சேர்ந்தனர்.

அவர்களில் இலங்கேசனும் ஒருவன்.

அவன் ராமேஸ்வரம் இறங்கு துறையை வந்து அடைந்தபோது மணி பிற்பகல் ஐந்து முப்பது, கூட்டத்துடன் கூட்டமாக அவன் சுங்கத் திணைக்களக் கட்டடத்திற்குள் காலடி எடுத்து வைத்தான்

தான் காலடி எடுத்து வைத்திருக்கும் இடம் தமிழ்நாடு என்று நினைத்ததும் வரலாற்றில் தான் இடம் பெற்று விட்டது போன்ற ஒரு பிரமை இலங்கேசனுக்கு ஏற்பட்டது.

இனி வரப்போகும் மரியாதைகள் 'சிலோன்' தமிழருக்கு எப்படி இருக்கும் என்பதை அவன் உணரவில்லை.

தனது பாஸ்போட்டை குடிவரவு அதிகாரியிடம் கொடுத்து ஒரு 'சீல்' பெறுவதற்காகக் காத்திருந்தான் இலங்கேஸ்.

'இலங்கேசன்' என்று குடிவரவு அதிகாரி கூப்பிட்டார், தனது தலையை அங்கே செலுத்தினான் அவன்!

'நீ ரா இலங்கேசன்' என்று கேட்டார் குடிவரவு அதிகாரி. 'ஓம் நான் தான்' என்றான் அவன்.

அவனை ஏற இறங்கப் பார்த்தார் குடிவரவு அதிகாரி.

பின்பு சொன்னார், 'போட்டோவில் இருக்கும் உருவத்துக்கும் உமக்கும் வித்தியாசம் இருக்கிறது; சீல் அடிக்க முடியாது.'

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஏமாற்றுதே... ஏமாறுதே...

ஒரு கிராமத்தில் இடையன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தன்னிடமுள்ள ஆடுகளையெல்லாம் மிகவும் கவனமாகக் காத்து வந்தான்.

தினமும் நல்ல புல்வெளிக்கு ஓட்டிச்சென்று அவைகளை மேய்த்து வந்தான். ஆடுகள் நன்கு வளர்ந்து வந்தன.

ஒருநாள் எதிர்பாராத விதமாக அவனால் ஆடுகளை மேய்க்க முடியாமற் போய்விட்டது உடற் சுகங் குன்றிய அவன் தனது சிறிய மகனை அழைத்து அவற்றை மேய்த்து வரச் சொன்னான்.

இடைச் சிறுவனும் ஆடுகளை ஓட்டிப் போய் மேய்த்து வந்தான் ஒரு பொழுது ஆடுகளை மேய்க்கச்சென்ற சிறுவன் தனது தந்தையை விளையாட்டாக ஏமாற்ற எண்ணினான்.

புல்வெளியில் ஆடுகள் இருந்தன. இடைச்சிறுவன் தூரத்திலே இருக்கும் தனது தந்தையைப் பார்த்து 'ஐயோ! புலி, புலி காப்பாற்றுங்கள்' என்று உரத்துச் சத்தமிட்டான்.

அதுகேட்ட இடையன், பயந்து நடுநடுங்கிப் போய் இன்னும் பலரை அழைத்துக் கொண்டு அவ்விடம் நாடி ஓடி வந்தான்.

ஓடோடி வந்த அவன், தன் மகனைப் பார்த்து, எங்கேடா புலி? என்று கேட்டான். அதற்கு அச்சிறுவன் சிரித்த வண்ணம், நல்லாய் ஏமாந்தீங்களா! புலியும் இல்லை, கிலியும் இல்லை நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்' என்றான்.

'உனக்கு விளையாட்டு, நான் பயந்தே போய் விட்டேன். ஆடுகள் ஜாக்கிரதை' என்று கூறிவிட்டுப் போனான்.

சிலநட் கழித்து அந்த இடைச்சிறுவன் அதே மாதிரி மீண்டும் செய்தான். ஆனால் அத்தந்தை இம்முறை கோபித்துக் கொண்டான் 'இப்படி இனிமேல் செய்யாதே விளையாட்டு வினையாகிவிடும்' என்றார்.

இப்படியிருக்கையில் ஒருநாள் இடைச்சிறுவன் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும்போது உண்மையில் புலி ஒன்று வந்துவிட்டது. அதைக் கண்ட சிறுவன் பயந்து போய் 'புலி புலி' என்று கத்தினான். ஆனமட்டும் கத்தியும் ஒருவரும் வரவில்லை.

ஏனெனில், இவன் இப்படித்தான் விளையாட்டுக்குக் கத்துகின்றான் என்று எல்லோரும் பேசாதிருந்துவிட்டனர் அந்தப் புலி ஆடுகளை அடித்துக் கொன்றுவிட்டது. எப்படியோ தப்பிவந்த சிறுவன் தந்தையிடம் விஷயத்தைக் கூறினான்.

'எல்லாம் உன் விளையாட்டால் வந்த வினை. ஒரு நாளும் விளையாட்டுக்குக் கூடப் பொய் சொல்லாதே உன்னால் வந்த வினையைப் பார்த்தாயா? என்று அதட்டினான் அந்த இடையன்.

சிறுவனும் அன்று முதல் திருந்திவிட்டான். பொய் சொல்லாமல் வாழத் துவங்கினான். அவனது வாழ்வு பொன்னாய் மலர்ந்தது.

இ. ஸ்ரீதரன்

## சின்னப்பிள்ளையும் சிங்கப்பிள்ளையும்

-சிவன்-

**சின்னப்பிள்ளை:**

சிங்கப்பிள்ளை சிங்கப்பிள்ளை
என்ன பார்க்கிறீர்
சிவந்த கண்ணைச் சொருகிச் சொருகி
என்ன பார்க்கிறீர்—எங்கள்
மூத்த அண்ணன் உம்மைக் கண்டா
மோத எழும்புவான்—உமக்கு
மூளை இருந்தால் இடத்தைவிட்டு
எழுந்து போய்விடும்.

**சிங்கப்பிள்ளை:**

என்னதம்பி சின்னப்பிள்ளை
பெரிதாய்க் கதைக்கிறாய்
என்னை உனக்குத் தெரியுந்தானே
கவனமாய்க் கதை

**சின்னப்பிள்ளை:**

அப்படியா சிங்கத்தாரே
ஆரை மிரட்டுறீர்
அந்தக்காலம் மலையிலேறி
மாறிப் போச்சுது
சிலுப்பல் மயிரைக் கண்டு நாங்கள்
ஒளித்து விடுவமோ?
சில்லறைகள் அல்ல நாங்கள்
சேர்ந்து நிற்கிறோம்
நல்லவராய் இருப்பதானால்
மெல்ல எழுந்துபோம்
இல்லை எனில் உமக்கும் எமக்கும்
மல்லுக் கட்டல்தான்.

## உங்களுக்குத் தெரியுமா?

—லேஸர் பற்றிய தகவல்கள்—

லேஸர் கதிரைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா? விஞ்ஞான ஆராய்ச்சி, செய்தித் தொடர்பு, விண்வெளி ஆராய்ச்சி மற்றும் மருத்துவத் துறையில் லேஸர் மிகவும் பயன்படுகிறது.

லேஸர் (LASER) என்ற பெயரே ஓர் ஆங்கில சொற்றொடரின் முதல் எழுத்துக்களால் ஆனது தான்

Light, Amplification by Stimulated Emission, of Radiation. லேஸர் கண்டு பிடிக்கப்பட்டு ஏறத்தாழ 25 வருடங்களாகின்றன.

நிலவுக்கு இங்கிருந்து அனுப்பப்படும் ரேடியோ மற்றும் டெலிவிஷன் அலைகளைத் திருப்பி அனுப்ப லேஸர் உதவுகிறது

மிகவும் கெட்டியான பொருள் ஒன்றில் லேஸரைக் கொண்டு சுலபமாகத் துளையிடலாம். உலோகங்களை வெல்ட் செய்யவும் (WELD) புற்றுநோய் செல்களை அழிக்கவும் லேஸர் உதவுகிறது

சூரிய ஒளி ஏழு வர்ணங்களாலானது. ஆனால் லேஸரில் வண்ணச் சேர்க்கையில்லை. சக்தி வாய்ந்த லேஸர் சகல உதவிகளையும் மனிதனுக்குச் செய்கிறது.

- ஆதாரம்: கோகுலம்

## பயன்தரும் பழமொழிகள்

—சா. கௌதமி—

(யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி)

★ காலைக் குளிப்பு சாலச் சிறப்பு.

• தீயினாற்சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே - நாவினாற்சுட்ட வடு.

★ தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை

• தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.

# சற்புத்திரனை காட்டுக்கு அனுப்பிய கைகேயியும் ஒரு பெண்ணா?

## இளையவன் இலக்குவன் கோபத்தில் எழுப்பிய கேள்வி

செல்வி சுலோசனா இராமச்சந்திரா

செல்வ வளமும் கல்வி வளமும் நிறைந்து விளங்கிய கோசல நாட்டின் தலைநகரான அயோத்தியின் வேந்தராகிய தசரத மன்னரின் சபைக்கு விசுவாமித்திர முனிவர் மிகவும் கோபத்துடன் வந்தார். தசரத மன்னனும் முனிவரை வணங்கி வரவேற்று அமரச் செய்தான். இவ்வரவேற்பைக் கண்ட முனிவரின் சினம் தணிந்து உன்னிடம் ஓர் உதவி பெற வந்தேன் என்று கூறினார்.

மன்னனும் இரு கரங்களைக் குவித்து இந்த அரசை அடைந்ததன் பயனை இன்று அடைந்தேன். நான் யாது செய்ய வேண்டுமென வினவினான்.

மக்களின் இன்னலைத் தடுப்பது அரசனின் கடமை. வேள்வி செய்ய முடியாது அரக்கர்கள் எனக்கு தொல்லை கொடுக்கிறார்கள், அதைத்தடுக்கும் உரிமை, வல்லமை ராமனுக்கே உண்டு எனவே அவனை என்னுடன் அனுப்புக என்று வேண்டினார்.

இதைக் கேட்ட மன்னன் வருத்தம் அடைந்ததுடன், தவமிருந்து பெற்ற பிள்ளை. இப்போது தான் அவ்வருத்தம் நீங்கியிருக்கின்றேன். அதற்குள் ராமனைப் பிரிவதா?

'நானே, வந்து வேள்வியைக் காக்கிறேன். ராமன் சிறியவன்; பயிற்சி இல்லாதவன்'' என்று காரணம் கூறினான்'. முனிவருக்குக் கோபம் எல்லை கடந்து விட்டது. அதைக் கண்ட மன்னன் ராமனை முனிவருடன் செல்வதற்கு அனுமதியளித்தான். தோளிலே அம்பாறுத் துணி தாங்கியும். உடைவாளும் வில்லும் கையிலே ஏந்திக் கொண்டும் ராமன் முனிவருடன் புறப்பட்டான்.

இமைப்பொழுதும் அண்ணனை விட்டுப் பிரியாத இலக்குமணனுக்கு இது பொறுக்க முடியவில்லை. காட்டில் ஏற்படும் துன்பங்களை எண்ணாது அண்ணனுக்குத் துணையாகச் சென்று உதவுவதுதான் கடமை என்று தானும் இராமனுடன் புறப்பட்டான்.

முனிவரும் வேள்வியைத் தொடங்க இருவரும் கண்ணை இமை காப்பது போல வேள்வியைக் காத்து நின்றார்கள். வேள்வியும் இனிதாக முடிந்தது.

பின்பு முனிவர் இருவரையும் மிதிலைக்கு அழைத்துச் சென்று, ஜனகரின் வில்லை ஒடித்து சீதையை மணந்து கொண்டு அயோத்திக்குச் சென்றார்கள். அங்கே தசரத மன்னன் மூத்த மகனை இராமனுக்கு முடி சூட்டி தாம் துறவு மேற்கொள்ள முடிவு கொண்டு இராமனிடமும் அதனைக் கூறி முடி சூட்டுவதற்கான ஆயத்தங்களைச் செய்தார்கள்.

இதனையறிந்த கைகேயி மன்னனிடம் பரதன் முடி சூடவும், இராமன் பதினான்கு ஆண்டுகள் காடாளவும் வேண்டுமென வற்புறுத்தினாள். மன்னன் துடித்தார். புலம்பினர், மறுத்தார். பயன் ஏதுமில்லை.

முடி சூட்டுதலுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இலக்குமணனும் அண்ணன் சிறப்பாக வாழப் போகிறான் என்று மகிழ்ந்தான். ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

கைகேயி இராமனை அழைத்து பரதன் நாடாளவும் நீ பதினான்கு ஆண்டுகள் காடாளவும் வேண்டுமெனக் கூறினாள்.

இதைக் கேட்ட ராமன் மகிழ்வுடன் 'என் தம்பி ஆட்சி பெற்றால் நான் பெற்றது போலத் தான். உன் கட்டளையை மேற்கொண்டு இன்றே காட்டிற்குச் செல்கிறேன் என்று புறப்பட்டான்.

அருகில நின்று எல்லாவற்றையும் கேட்ட இலக்குமணன், உலகத்தை அழிக்கும் ஊழி மேகம் போன்று பொங்கி எழுந்தான்; விழிகள் மின்னலைப் போல கோபத் தீயைக் கக்கின; மூக்கிலிருந்து நெடுமூச்சு விசிற்று; உடம்பிலிருந்து மழைநீர்போல வியர்வை பெருகிற்று. 'சிங்கத்திற்கு இடும் ஊனை நாய்க்கு இடுவது போலல்லவா இருக்கிறது இச் செயல். இராமனுக்குரிய நாட்டைப் பரதனுக்குக் கொடுப்பதா? என்று கர்ச்சித்தான். கோபாவேசத்தை அடக்க முடியாது அங்கும் இங்கும் திரிந்தான். 'முத்தொழில் புரியும் மும்மூர்த்திகளே வந்து தடுத்தாலும் சரி! இவ்வுலகில் பெண்களே இல்லாமல் செய்வேன்' என்று வீரமுழக்கமிட்டான். பாற்கடலில் மலை ஒன்று சுழல்வது போலத் திரிந்தான். என்னை எதிர்த்தவரை பூமியின் பாரம் குறைய கொன்று குவித்துவிட்டு ராமனுக்கு முடி சூட்டுவேன். என்னைத் தடுக்கும் வலிமை உடையோர் தடுங்கள். சத்தியத்தையும் குலமுறையையும் கெடுத்து விட்டாள் கைகேயி. அவள் காணும்படி அண்ணனுக்கு முடி சூட்டுவேன், என்று கூறினான்.

(வளரும்)

## பொன்மொழிகளில் பெண்மணிகள்!

- மக்களைப் பிரதிபலிப்பது நாடாளுமன்றம்; அங்கு எத்தனை ஆண்கள் இருக்கிறார்களோ அத்தனை பெண்களும் இருக்கவேண்டும். -ஷா-
- பூவுலகில் நரகமும் சுவர்க்கமும் பெண்கள் வசமே அடங்கி உள்ளன. -டென்னிஷன்
- தூய்மையான உள்ளங்கொண்ட பெண்ணின் காதலே அவளது அழகிய 'அணிகலன்' -கிளாடியஸ்-

நங்கை

## ஏழிசை மன்னரின் நினைவுகள் வந்ததே...!



இதயத்தை நிறைக்கும் இன்ப நாதம் இனிமையாக வீசும் தென்றற் காற்றைப்போல் வந்து காதிலே நுழைகின்றது.

மன மகிழ்ச்சி தரும் மந்த மாருதம் சிந்தையிலே சிருங்காரம் பேசும்.

அந்த சிருங்காரம் பேசும் பாடல்கள் ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜபாகவதருடையவை.

சிவகவி, அசோக்குமார், சிந்தாமணி, சியாமளா, அமரகவி போன்ற படங்களில் நடித்துப் புகழேணியின் உச்சியிலே கொடி கட்டிப் பறந்தவர் இவர்.

பாகவதர் படம் என்றாலே ஜனத்திரள் தான். அன்றைய சினிமாவிலே பாடிக் கொண்டே நடிக்கும் திறமை படைத்தவரில் தியாகராஜ பாகவதரும் ஒருவர்.

அவர் மறைந்து இன்று பல ஆண்டுகள் மறைந்து விட்டன. ஆனால் அவரது இனிய தெய்விக கானம் காதுகளில் ஒலித்துக்கொண்டு தான் இருக்கின்றது.

கணீரென்ற குரலில் கானமழை பொழியும் கார்மேகம் கலந்தது ரசிகர் செய்த பாவம்.

இந்தக் காலத்து சிறிசுகள் பலருக்கு அவரையோ, அவரது திறமையையோ தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை.

ஒரு கலைஞன் இப்படித்தான் லட்சணமாக இருப்பான் என்பதற்கு அவருடைய தோற்றம் ஒரு மாதிரி. இளம் ரசிகர்களுக்கு ஏழிசை மன்னரை அறிமுகப்படுத்துகிறோம்.

# வெள்ளித்திரை

தயாரிப்பு: பேரின்பம்

# லட்சுமியின் வாழ்க்கையை 'தவம்' குலைத்துவிட்டதே!

நடிகை லட்சுமி சொந்தப் படம் தயாரித்ததோடு சிக்கல்களும் தலை தூக்கத் தொடங்கி விட்டன.

'தவம்' வியாபார ரீதியில் சரியாக ஓடவில்லை என்பது ஒரு புறமிருக்க, குடும்ப வாழ்க்கையிலும் பிரச்சினையை ஏற்படுத்தி விட்டது.

'தவம்' படத்தைக் கன்னடத்திலும் சொந்தமாகத் தயாரித்தார் லட்சுமி. தமிழ்ப் பதிப்பில் லட்சுமிக்கு இணையாக நடித்த வேடத்தை கன்னடத்தில் ராஜீவ் நடித்திருந்தார்.

அப்போது லட்சுமிக்கும் ராஜீவுக்கும் ஏற்பட்ட நட்பு வெகுவாக வளர்ந்து 'வேறு மாதிரி' சென்றுவிட்டது. லட்சுமியின் கணவர் மோகனுக்கும் விஷயம் தெரிந்தது. ஆரம்பத்திலேயே கண்டித்தார்.

கணவரின் கண்டிப்பை அலட்சியம் செய்த லட்சுமி தன் போக்கிலேயே தொடர்ந்து நடக்க ஆரம்பித்தார்.

அத்துடன், தான்நடிக்கும் படங்களிலும், தனக்கு செல்வாக்கு இருக்கும் தயாரிப்பாளர்கள், இயக்குநர்களிடமும் ராஜீவை சிபாரிசு செய்ய ஆரம்பித்தார் லட்சுமி.

விஷயம் விபரீதமாகப் போய்க் கொண்டிருக்கவே மோகன், லட்சுமியிடமுள்ள தனது உறவைத் துண்டித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தார்.

நுங்கம்பாக்கம் பகுதியில் ஒரு வீட்டில் இப்போது மோகன் தனியாக இருக்கிறார்.

சைதாப்பேட்டை வீட்டில் ராஜீவின் தலை அடிக்கடி தென்படுகிறதாம்.

இந்த நடிகைகளே இப்படித் தானோ?

### சங்கீதா மைதிலியாகிறார்

கல்லூரி மாணவியான சங்கீதா, 'மைதிலி என்னைக் காதலி' படத்தின் மூலம் பிரபல்யமாகி உள்ளவர்

சங்கீதா என்ற பெயரில் இன்னும் ஒரு நடிகை இருப்பதால், இவர் தனது பெயரை 'மைதிலி' என்று மாற்றிக் கொள்ளப் போகிறாராம்.

### மீண்டும் நிர்மலா

படவுலகில் இருந்து விலகி இருந்த 'வெண்ணிற ஆடை' நிர்மலா நீண்ட இடைவேளைக்குப் பின்பு மீண்டும் நடிக்கத் தொடங்கியுள்ளார். படம்: பூங்காற்று திரும்புமா?'

### ★ நட்சத்திர முகவரி ★

விஜயகாந்த்
கண்ணபமாள் தெரு,
கண்ணபிரான் காலனி,
சாலி கிராமம்,
சென்னை - 93

நளினி
16, மகாலிங்கம் தெரு,
மகாலிங்கபுரம்,
சென்னை - 34

'ஆண்பாவம்'
சீதா
18, சந்திரபானுத் தெரு,
(சித்ரா தியேட்டர் அருகில்)
அண்ணாசாலை,
சென்னை - 2

எஸ். எஸ் சந்திரன்
129, பஜனைக்கோயில் தெரு,
சூளை மேடு,
சென்னை - 94

ரகுவரன்
13, கார்ப்பரேஷன் காலனி
சென்னை - 24

அனுமந்து
12, படேல் தெரு,
சென்னை - 33

## நடிகை சுஹாசினிக்கு வரும் கோபம்!

கமலஹாசனும் இந்தி நடிகை சரிகாவும் திருமணம் செய்து கொள்



ளாமல் கணவன்-மனைவியாக குடும்பம் நடத்தியதும்—

அதன் விளைவாக சரிகாவுக்கு பெண் குழந்தை பிறந்ததும் ஏற்கனவே தெரிந்த விஷயங்கள்.

கமலின் பெருமகள் சுஹாசினியிடம் இது பற்றி செய்தியாளர்கள் கேட்டால் சீறி விழுகிறாராம் அவர்

''அதைப் பற்றி என்னிடம் எதையும் கேட்காதீர்கள். அது விஷயமாக, [illegible] நான் உங்களைச் சந்திக்க [illegible] என்கிறாராம் கடுமையாக சுஹாசினி.

## இந்திப் படவுலகுக்கு போனால் என்ன...?



தமிழ்ப் படங்களில் நடித்த எத்தனையோ நடிகைகள் எல்லாம் இந்திப் படவுலகுக்குப் போய்விட்டார்கள். போதாக் குறைக்கு ராதிகாவும் போய்விட்டார்.

எனக்கு மட்டும் என்ன குறைச்சல்? இந்திப் படவுலகிற்குள் நுழைந்தால் என்ன? என்று யோசிக்கிறாரோ அம்பிகா.

## ஊர்வசிக்கு தமிழில் இல்லாத ராசி மலையாளத்தில் எப்படி வந்தது?

தமிழில் சமீபத்தில் ஊர்வசி நடித்த எல்லாப் படங்களும் தோல்வி கண்டன. அதைத் தொடர்ந்து 'ராசி இல்லாத நடிகை' என்று அவரை தமிழ்ப் படவுலகம் ஒதுக்கி வைத்தது.

ஆனால் மலையாளப் படவுலகம் அவரை வா, வா என அழைத்தது. அங்கே அவர் சக்கை போடு போட்டுக் கொண்டிருக்கிறார்.

ராசி இல்லாத நடிகை என்று தமிழ்ப் படவுலகம் ஒதுக்கியது பற்றி விளக்குகிறார் அவர்:

நான் தமிழில் பிஸியாக இல்லை. ஆனால் மலையாளத்திலும் கன்னடத்திலும் பிஸியாகத்தான் இருக்கின்றேன்.

ஏன், தெலுங்கிலும் கூட நடித்து வருகிறேன். எனக்கு தமிழில் இல்லாத ராசி மலையாளத்திலும் கன்னடத்திலும் இருக்கிறதோ என்னவோ?

ஒரு படம் தோல்வி அடைவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அந்தப் படத்தில் நடித்த நடிகர், நடிகைகள் மட்டும் காரணமாக இருக்க முடியாது.

ஒரு படத்தின் கதை அம்சம் காரணமாக இருக்கலாம். அல்லது நல்ல கதை இருந்தும் அது சொல்லப்பட்ட விதம் சரியில்லாத விதத்தில் இருக்கலாம்.

ரசிகர்கள் எதிர்பார்க்கும் விதத்தில் பாடற் காட்சிகளோ, சண்டைக் காட்சிகளோ சரியில்லாதபடி அமைந்து இருக்கலாம்.

இப்படி இவ்வளவு விஷயங்கள் இருக்கையில் எல்லோரையும் விட்டு விட்டு எனக்கு மட்டும் ராசி இல்லை என்று சொல்வது எப்படிப் பொருந்தும்' என்று கேட்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல்
க.பொ.த ப [உ தர]

# உற்பத்தி அடிப்படையில் வேறுபடும் பொருளாதார முறைமைகள்

மக்கள் தமதுசமூகத்தின் உற்பத்தியை ஒழுங்குபடுத்தியிருக்கின்ற முறையில் பொருளாதார முறைமை எனலாம். வேறுவிதமாகக் கூறின் மக்கள் தம் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளும் நோக்குடன் உற்பத்திக்காரணிகளுடன் ஒருங்கிணைந்து ஏற்படுத்திக் கொண்ட ஏற்பாடே பொருளாதாரமுறைமை எனலாம். உற்பத்தி முறை என்ற அமைப்பை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது என்பதைப் பொறுத்து பொருளாதார முறை வேறுபடுகின்றது. பொருளாதார முறையை வேறுபடுத்தும் அம்சங்களை 5 ஆகப் பிரிக்கலாம்.

1. சமூகத்தின் உற்பத்திக்காரணிகளின் உடைமையாளர்.
2. சமூகத்தில் காணப்படும் வர்க்க வேறுபாடு.
3. உற்பத்தி மூலம் கிடைக்கும் இலாபத்தைப் பெற்றுக்கொள்வோர்.
4 சமூகத்தின் உற்பத்தி மேற்கொள்ளப்படும் நோக்கம்.
5. சமூகத்தின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைக்கு காணப்படும் தீர்வு.

பொருளியலாளர்கள் இப்பொருளாதார முறைகளைப் பல்வேறு கோணத்திலிருந்து அணுகுவதால் பொருளாதார முறைகள் பல்வேறு கோணத்தில் நோக்கப்படுகின்றது.

(I) வரலாற்றில் காணப்பட்ட பொருளாதார முறைகள்.
A. பூர்வீகப் பொருளாதாரம்.
B. ஆண்டான் அடிமைப் பொருளாதாரம்.
C. நிலமானியப்பொருளாதாரம்.
D. முதலாளித்துவப் பொருளாதாரம்.
E. சமூக உடைமைப் பொருளாதாரம்.
F. கலப்புப் பொருளாதாரம்.

இன்று நடைமுறையில் காணப்படுவதாகக் கூறப்படுவது முதலாளித்துவப் பொருளாதாரம், சமூகஉடைமை பொருளாதாரம், கலப்புப் பொருளாதாரம் ஆகிய மூன்றுமேயாகும். இப்பொருளாதார முறைகள் எல்லாவற்றிலும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் ஒன்றுகவே காணப்படுகின்றன. ஆனால் அவற்றைத் தீர்த்துவைக்கும் முறைகளிலேயே அவை ஒன்றுடன் ஒன்று வேறுபடுகின்றன. இப்பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான தீர்மானங்களை எடுப்போர்களாக மூன்று பிரிவினர் காணப்படுகின்றனர்.

அ) தனிநுகர்வோர். (வீட்டுத்துறையினர்)
ஆ) தனி உற்பத்தியாளர். (நிறுவன துறையினர்)
இ) அரசாங்க உத்தியோகத்தர். (திட்டமிடல் குழுவினர்)

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான தீர்மானங்களை மேற்கொள்பவர்களாக வீட்டுத்துறையும், நிறுவனத்துறையும் காணப்படின் அது முதலாளித்துவ பொருளாதாரம் எனப்படும். அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் திட்டமிடல் குழுவினர் கூடிய பங்கு வகித்தால் அதுசமஉடைமைப்பொருளாதாரம் எனப்படும். மேற்கூறிய மூன்று பிரிவினரும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதில் சமமான பங்கை வழங்கினுல் அது கலப்புப் பொருளாதாரம் எனப்படும்.

இன்று எந்த நாட்டிலும் தூய முதலாளித்துவ அமைப்பைக் காண முடியாது. எனவே பொருளாதார முறையை மூன்றுக வகைப்படுத்துவது தவறுனது எனச் சில பொருளியலாளர்கள் கூறுகின்றனர். அத்துடன் அவர்கள் கலப்பு முதலாளித்துவ பொருளாதார அமைப்பு, சமதர்ம பொருளாதார அமைப்பு ஆகிய இரண்டு அமைப்புக்கள் உள்ளன எனவும் கூறுகின்றனர்.

II. அண்மைக்காலங்களில் சில பொருளியலாளர்கள் பொருளாதார அரசியல் காரணிகளை கவனத்தில்கொண்டு பொருளாதார அமைப்புக்களை ஐந்தாக வகைப்படுத்தலாம் எனவும் கூறுகின்றனர்.

1) சமூக ஜனநாயக சோஷலிச பொருளாதாரம்.
2) மார்க்சிஷ - லெனினிஷ பொருளாதாரம்.
3) மூன்றும் உலக சோஷலிசப் பொருளாதாரம்.
4) முதலாளித்துவப் பொருளாதாரம்.
5) கலப்புப் பொருளாதாரம்.

III) சில பொருளியலாளர்கள் உலக நாடுகளை இரண்டு பொருளாதார உலகங்களாக வகைப்படுத்தியுள்ளனர்.

1) செல்வந்த உலகம். (வளர்ச்சியடைந்த)
2) வறிய உலகம். (குறைவிருத்தி தன்மை கொண்ட)

வளர்ச்சியடைந்த உலகம் என ஒன்று காணப்பட்டால் நிச்சயமாக குறைவிருத்தி உலகமும் காணப்படும். எனவே தான் சர்வதேச வர்த்தகத்தில் இந் நாடுகளை இரண்டாகப் பிரிக்கின்றனர்.

1) வடபகுதி நாடுகள்.
2) தென்பகுதிநாடுகள்.

இந்நாடுகளுக்கிடையே வருமான ஏற்றத் தாழ்வில் வேறுபாடு காணப்படுகிறது. இதை நீக்குவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு நடைமுறையே வடக்கும் தெற்கும் கலந்துரையாடல் ஆகும்.

IV) சில பொருளியலாளர்கள் தலா வருமானப் பொருளாதார முறைமை கொண்டு உலக நாடுகளை மூன்றுக வகைப்படுத்துகின்றனர்.

A) வளர்ச்சியடைந்த சந்தைப் பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் — முதலாம் உலகம். (உ. ம்) ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, யப்பான்.

இந்நாடுகளின் தேசிய உற்பத்தியில் கைத்தொழிற்றுறையின் பங்கு அதிகமாகவும் தலா வருமானம், வாழ்க்கைத்தரம் என்பன உயர்வானதாகவும் காணப்படும்.

B) திட்டமிடப் பொருளாதாரங்கள் — இரண்டாம் உலகம். (சோஷலிசப் பொருளாதாரம்)

இதில் வளர்ச்சியடைந்த நாடுகளும் (உ.ம். கிழக்கு ஜேர்மனி, ரஷ்யா, போலந்து) குறைவிருத்தித் தன்மை கொண்ட நாடுகளும் (உ. ம். வியட்னும், கம்போடியா, சீனு, லாவோஸ்) காணப்படுகின்றன. இக்குறைவிருத்தித் தன்மை கொண்ட நாடுகள் தம்மை மூன்றும் உலகம் எனவும் கூறிக் கொள்கின்றன.

C) குறை விருத்தித் தன்மை கொண்ட கலப்புப் பொருளாதாரங்கள்— மூன்றும் உலக நாடுகள்.

இந் நாடுகளின் தேசிய உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்கு குறைவாகவும் விவசாயத் துறையின் பங்கு கூடுதலாகவும் காணப்படும். அத்துடன் மக்களது தலா வருமானம், வாழ்க்கைத்தரம் என்பனவும் குறைவாகக் காணப்படும்.

பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே இவ்வகைப்படுத்தல்கள் அமைந்துள்ளமையால் நீண்ட காலப் போக்கில் உலக நாடுகளை இரு உலகமாகவோ, மூன்று உலகமாகவோ வகைப்படுத்துவது ஏற்கக்கூடியதல்ல என 'டட்லி சியர்ஸ்' அவர்கள் கூறுகின்றனர்.

த. முத்துக்குமாரசாமி பி. ஏ;டிப்ளோமா




# கல்வி பற்றி மேலை நாட்டு மேதைகள்

ஞானங்களை வளர்ப்பதே கல்வியின் மிகப் பெரிய இலக்கு. இதே ஒரே ஒரு குறிக்கோள்—ஓஷியா O'shea (தோற்றம் 1864) அமெரிக்கக் கல்விமான்;

பணத்தையும் முயற்சியையும் ஓரளவுக்கொன்று அழிப்பதிலும் அழிப்பதிலும் நடுநிலைமையில் ஈடுபட வைத்திருப்பதால், எல்லா அறிவும் செறிந்த அரிய உபொருள் அடங்கியுள்ள ஆக்கக் கல்வியில், இன்றைய தனிச் செலவு செய்தல் இன்றியமையாதது ஜோன் கல்ஸ்வோதி John Galsworthy (1867-1933) ஆங்கில நாவலாசிரியர்.

துணிவைத் தூண்டுவதே கல்வியின் ஒரே ஒரு குறிக்கோளாக இருக்க முடியும் - மருத்துவ ஞானி அல்பிரட் அட்லெர் Dr. Alfred Adler (தோற்றம் 1870) ஒஸ்றியன் உளநோய் நிபுணர்.

காலணிகள், ஆணிகள், ஊசிகளை ஒருவன் உற்பத்தி செய்யக் கற்பதன்றி, அவன் ஒரு மனிதனை என்பதற்காகவே கல்வியைப் புகட்ட வேண்டும் - சன்னிங் Channing (1780-1842) அமெரிக்க ஒன்றிய மதத் தலைவர்.

இயற்கைத் தோற்றத்தின் ஆற்றலை அது நியதிகளை அறிந்து, இவற்றுடன் இசையக் கூடிய அன்பையும் திறவுளத்தையும் இயற்கை விதிகளோடு இணைக்கும் கல்வி—எஸ். எவ் ஸ்கோவெல S. F Scovel (மறைவு 1825) அமெரிக்க மதத்தலைவரும், கல்விமானும்.

கல்வியின் பிரச்சினைகள் இருவகைப்படும், ஒன்று, அறிதல்; பின்னரி வேதம், அவ்வாழ்வை மேற்கொள்ளும் ஒவ்வொருவனும், தான பேசுவதைக் காட்டிலும் புனிதமாகவும் ஆழமாகவும் சிந்திக்கின்றுன் - ஆர் எல். ஸ்ரீவென்ஸன் R. L. Stevenson (1850-1894) ஸ்கொற் நூலாசிரியர்.

க. கயிலாயநாதன்
(வட்டுக்கோட்டை கலாநிலைய முதல்வரும் ஆங்கிலப் போதனாசிரியரும், பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் ஆங்கில விரிவுரையாளரும்)

# புற்று நோய்: சில அறிவுரைகள்

— 3 —

ஊ) நீடித்த காலமாக உடலைப் பாதித்து வரும் நோய்கள்.

1) சில சாதாரணமான நோய்களும் நீடித்தகாலமாக உடலைப் பாதிக்கும்போது புற்றுநோய்க்கு வழிவகுக்கின்றன. உ.ம. அதாவது ஏற்படும் புண்கள் சிறுநீரகத்தில் அல்லது பித்தப்பையில் கற்கள், இரும்புச்

## உயிர்ச்சத்துக் குறைவான உடலிலும் இந்த நோய் இடப் பிடித்துவிடும்

சத்துக் குறைவால் உண்டாகும் இரத்தச்சோகை, மதுவால் உண்டாகும் ஈரல் சுருங்கல் முறையே வாய், களம், ஈரல் என்பவற்றில் புற்று நோய்க்கு வழிவகுக்கலாம்.

2) சில தீங்கற்ற வளர்ச்சிகள் உ ம். பப்பிலோமா (தோலில் ஏற்படும் தீங்கற்ற வளர்ச்சி) வியுகோபிளேக்கியா வாயில், ஆண் உடம்பில் ஏற்படும் வெண்தடிப்பு, சில காலத்தில் தீயவளர்ச்சியாக மாறலாம்.

3) குறிப்பான காரணிகள்

அ) உணவு

1) உணவில் உயிர்ச்சத்து ஏ, இரும்புச்சத்து என்பனவற்றின் பற்றாக்குறைவு, வாய்க்குழி, களம், இரப்பை என்பவற்றில் புற்றுநோய் தோன்றும் வீதத்தை அதிகரிக்கலாம்.

2) அதிகளவில் கொழுப்புச் சத்தையும் (பிரதானமாக விலங்குக் கொழுப்பு) அதிகளவு புரதத்தையும் உட்கொள்வதால், பெருங்குடல் கருப்பை, மார்பு, சிறுநீரகம் என்பவற்றில் புற்றுநோய் வீதம் அதிகரிக்கின்றது. ஆனால் எமது நாட்டில் செல்வந்தரைத் தவிர ஏனையோருக்கு இது காரணமல்ல.

3) நார்த்தன்மை குறைந்த உணவு பெருங்குடலில் நோயை ஏற்படுத்தலாம். இதுவும் எம் நாட்டில் அரிதாகவே காரணமாகும்.

4) அதிக காப்பி அருந்துவது, புகைத்தலுடன் சேர்ந்தால சலப்பை, சிறுநீரகம் ஆகியவற்றில் புற்று நோயை உண்டாக்கலாம்.

5) பூஞ்சணம் பிடித்த பனங்கிழங்கு, பனமமா, நிலக்கடலை தொடர்ந்து பாவித்தால், ஈரலில் புற்றுநோய் ஏற்படலாம்.

6) அதிகளவில் உப்பைக் கொண்ட மீன் சாப்பிடுதல், களத்தில் புற்றுநோயை ஏற்படுத்தலாம்

7) செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்களுக்கு சேர்க்கப்பட்ட சில பதார்த்தங்கள், களம், இரப்பை, சிறுநீர்ப்பை என்பவற்றில் புற்றுநோய் வீதத்தை அதிகரிக்கலாம்.

8) மிகவும் சூடான உணவு உட்கொள்வதால் வாய்க்குழியிலும் களத்திலும் புற்றுநோய் வாய்ப்பு அதிகரிக்கலாம்

9) கறிகளுக்குச் சேர்க்கப்படும் சரக்குகள் அதிக வாயின் வாய்க்குழி, களம், இரப்பை ஆகியவற்றின் புற்றுநோய் தோன்றும் வீதத்தை அதிகரிக்கலாம்.

ஆ) புகைத்தல்

புகைத்தல் - புகையிலுள்ள நிகொட்டின் போன்ற பதார்த்தமும், புகையிலை எரியும் பொழுது உண்டாகும் வேறு பதார்த்தங்களும் நுரையீரலிலும் வேறு அங்கங்களிலும் புற்று நோயை உண்டாக்கலாம். பாதிக்கும் தாக்கச் சந்தர்ப்பம், ஒருவர் புகைக்கும் அளவு, நிக்கொட்டின் அளவு, புகைத்தலுடன் மதுபானம் அருந்துதல் என்பவற்றில் தங்கியுள்ளது.

இ) மதுபானம்

பெரும்பாலும் வாய்க்குழி, களம், ஈரல், சிறுநீர்ப்பை என்பவற்றில் காரணியாகலாம். புகைத்தலும் சேர்ந்தால் தாக்கச் சந்தர்ப்பம் அதிகரிக்கும்.


ஈ) வெற்றிலை சாப்பிடுதல்

வாய்க்குழியில் புற்றுநோய் ஏற்படுவதற்கு வெற்றிலையுடன்சேர்க்கும் புகையிலையே முக்கிய காரணமாகும்

உ) முன்கூறிய பொது காரணங்களின் அமைப்பில் தொழில், சுற்றுடல் சம்பந்தப்பட்ட காரணிகள்.

ஊ) சில மருந்துகள்

மிக மிக சில மருந்துகள் தொடர்ந்து சாப்பிடுவதால புற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்பம் உண்டாகின்றது. [வளரும்]




- டாக்டர் வே. கிருஷ்ணராஜா -
சத்திர சிகிச்சை நிபுணர்

# கண் அயர்வு

உணவு உண்பதற்கு என்று சிலநேரங்கள் உண்டு. அந்த நேரங்களிலும் சரி வேறு நேரங்களிலும் சரி உணவு உண்டால் எமக்கு ஒரு தூக்க உணர்வு ஏற்படுகிறது. அதற்குக் காரணம் என்ன தெரியுமா?

நாம் உணவு உண்டதும் அது சமிபாடடைய

(7 ஆம் பக்கம் பார்க்க)

# தொழில்வளம் வடக்கில் உயர நுண்திறன் தேர்ச்சி வேண்டும்

யாழ் மாவட்டப் பாடசாலைகளிலிருந்து சராசரி 25000 மாணவர்கள் வருடாந்தம் உயர் வகுப்புகளிலிருந்து வெளியேறுகிறார்கள். இவர்கள் தமது பொருளாதார வளத்தைப் பெருக்கிக் கொள்வதற்குத் தொழிற் திறமையுடையவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகும். தொழில் பற்றிய அறிவு, கைத்திறன், கைத்தொழில் பற்றிய நல்மனப்பாங்கு ஆகியன ஒரு தொழிலைத் தேடிக் கொள்வதற்கு அவசியமாகும்.

இன்று வடபிரதேசத்தில் கைத்தொழில் வாய்ப்புகள் பெருமளவு உள்ளன. ஆனுல் திறமை மிக்க தொழிலாளரே பற்றுக்குறையாக உள்ளனர்.

உதாரணமாக மரவேலை, உலோகவேலை, மின்சாரவேலை, எலெத்திரனியல், மோட்டார் பொறித்தொழில், உடையமைத்தல் போன்றன வற்றைக் கூறலாம்.

இத் தொழில்களால் உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான பொருள்கள், சேவை ஆதியன வெளியிடங்களிலிருந்தே வடபிரதேசத்திற்கு வருகின்றன. தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறுனவற்றையெல்லாம் உள்ளூரில் தயாரிப்பதே பயனுள்ளதாகும். இதனுல் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதோடு, பணமும்

## பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்கள் தொழிற் திறமைபெறுவது பயன்மிக்கது

உள்ளூர் அபிவிருத்திக்குப் பயன்படும்.

தொழிற்தகுதி பெற்றவர்கள் பலர் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதால் அவ்விடங்களை நிரப்புவதற்குக் கைத்தொழிலாளர் தேவை அதிகரித்துள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தில் பாடசாலையை விட்டு விலகிய மாணவ, மாணவியர்கள் பால் வேறுபாடு இன்றிக் கைத்தொழிலில் ஈடுபட முன்வர வேண்டும். இதற்கான பயிற்சிகளைத் தொழில்நுட்பக் கல்லூரி, இளைஞர் சேவை மன்றங்கள், தொழிற்திணைக்களப் பயிற்சிப்பிரிவு, கல்வி அமைச்சின் முறைசாராக் கல்விப் பிரிவு போன்றன வழங்குகின்றன.

யாழ் மாவட்டத்தில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 26 பாடசாலைகளில் மரவேலை, உடையமைத்தல், மின்சாரவேலை, மின் ஒட்டு வேலை, வானொலி பேணல், படவரைஞர், மேசன்வேலை, உலோக கடைச்சல் வேலை, தொழிற் பொருளுற்பத்தி, ஹோட்டல் முகாமைத்துவம், ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சு, மோட்டார் பொறித்தொழில் ஆகிய பன்னிரண்டு தொழிற் துறைகளில் சராசரி 2000 மாணவர்க்குப் பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான விளம்பரமும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையை விட்டு விலகிய 16 — 45 வயதிற்குட்பட்ட இருபாலாரும் எவ்வித வேறுபாடுமின்றி எல்லாப்பயிற்சி நெறிகளிலும் சேர்த்துக்கொள்ளப்படுவர். உடையமைத்தல், ஹோட்டல் முகாமைத்துவம், தட்டச்சு வேலைகளே பெண்களுக்குரியன எனப் பெண்கள் நினைக்காது ஏனைய துறைகளிலும் கற்க முன் வருதல் வேண்டும்.

இன்று சாதாரண கைத்தொழில் வேலையாளுக்குக் கிடைக்கும் சம்பளம் தினமொன்றுக்கு 75 ரூபா என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

இது ஒரு ஆசிரியரின் சம்பளத்திற்கு எவ்விதத்திலும் குறைவானது அல்ல. 'கைத்தொழிலில் ஈடுபடுபடுவது தாழ்வானது' எனும் மனப்பாங்கை மாணவர் மாற்றித் 'தொழில்கள் யாவும் பொருளாதார வளத்துக்கும், நாட்டின் அபிவிருத்திக்கு ஆற்றும் சேவை' எனும் நல்மனப்பான்மை வளர்த்துக் கொள்வது அவசியமாகும்.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் கவலையுனக்கில்லை' எனும் பாடலின் கருத்துணர்ந்து பாடசாலையை விட்டு விலகியிருக்கும் ஒவ்வொருவரும் அரச வேலை வரும் எனக் காத்திருக்காது ஏதாவது ஒரு கைத்தொழிற்றுறையில் இறங்குவது இக்காலகட்டத்தில் அவசியமானதாகும்.

இப்பயிற்சிகள் 360, 120 மணி நேரப் பாடத்திட்டங்களைக் கொண்டன. பாடசாலைகளின் நேரவசதிகளுக்கு ஏற்ப காலநேரங்கள் அமையும். பயிற்சிகள் இலவசமாகவே நடத்தப்படுகின்றன. ஆனுலும் மூலப்பொருட்செலவில் ஒரு சிறுபகுதியை மாணவர்கள் ஏற்க வேண்டியிருக்கும். பயிற்சி முடிவில் திணைக்களத்தால் நடத்தப்படும் பொதுப்பரீட்சையில் தேறிய மாணவர்க்குச் சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சிகளில் பங்குபற்றிப் பயன் பெறுமாறு மாணவர்களைத் தூண்டவேண்டியதும், ஆலோசனை வழங்க வேண்டியதும் பெற்றோர், ஆசிரியர் ஏனைய இளைஞர் இயக்கங்களினது கடமையாகும்.

ச. சுப்பிரமணியம்
வட்டாரக்கல்வி அலுவலர் (தொழில்நுட்பம்)
(இணைப்பு உத்தியோகத்தர் முறைசாராக் கல்விப் பிரிவு) கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸ் நோய்க்கு இலக்கான

## அமெரிக்க நடிகரின் இறுதி வாழ்க்கை

'எய்ட்ஸ்' நோயினால் பீடிக்கப்பட்ட ஹொலிவூட் நடிகர் ரொக் ஹட்ஸன் இறுதியில் எப்படி இறந்தார்?

அமெரிக்காவில் அதிகமாக விற்பனையாகும் 'நேஷனல் என்குயரர்' என்னும் பத்திரிகை அது பற்றிய விவரங்களை வெளியிட்டிருக்கிறது.

எய்ட்ஸ் நோயினால் தான் பீடிக்கப்பட்டுள்ளதாக அறிவித்த முதல் உலகப் பிரமுகர், ரொக் ஹட்ஸன்தான்.

கடந்த ஜூலையில் எய்ட்ஸ் நோய் இவரைப் பீடித்தது

65 வயதான இவர், இறக்கும் சமயம் 80 வயதுத் தாத்தாவின் தோற்றத்தைப் பெற்றிருந்தார்.

இறப்பதற்கு முன்னர், தனது அறையில் இருந்த கண்ணாடிகளையும், தனது புகைப்படங்களையும் அகற்றிவிட்டார்.

காலமாவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர், திடுக்கிடும் கனவு ஒன்றை அவர் கண்டார்.

தனது அறையில், தன்னுடைய இறந்த தாயார் தன்னுடன் பேசிக்கொண்டிருந்ததாக ஹட்ஸன் பின்னர் சொன்னார்.

கனவிலிருந்து விழித்தவுடன் பாவமன்னிப்புக் கேட்க பாதிரியார் ஒருவரை அழைத்து வரும்படி உதவியாளர்களிடம் சொன்னாராம் ஹட்ஸன்.

பாதிரியார் வந்தார். அவரிடம் பாவமன்னிப்புக் கேட்ட ரொக் ஹட்ஸன், 'எய்ட்ஸ்' நோய் ஆராய்ச்சிக்காக 2 லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டாலர்கள் நன்கொடையும் வழங்கினார்.

'இறப்பதற்கு இது ஒரு பயங்கரமான வழி ஆனால் நான் பயப்படவில்லை. கடவுளுடன் நான் அமைதியாகி விடுவேன்' - இப்படிக் கூறிய அவர் சில நிமிடங்களில் மயக்கமடைந்தார்.

இறப்பதற்கு சரியாக 3 மணித்தியாலங்களுக்கு முன்னர், திடீரென்று மயக்கத்தில் இருந்து எழும்பிய அவர் படுக்கை அறையின் ஜன்னல் அருகில் கதிரை ஒன்றில் அமர்ந்து கொண்டு குறுக்கெழுத்துப் போட்டி ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

ஹட்ஸனின் மரணம், திடீர் என்றுஏற்பட்டது அருகில் இருந்த நர்ஸுக்கே அதிர்ச்சி தந்தது.

தலையணையை வசதியாக இழுத்து விட்டாள் அவரின் நர்ஸ். அச்சமயம் ஹட்ஸன் வாயைத் திறந்து மூச்சு விட்டபடி தலையைக் கீழே சரித்தார் அது தான் அவரது கடைசி மூச்சு.

ஹட்ஸன் மறைந்து விட்டார்.

இறப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்னரே தனது இறுதிக் கிரியைகளுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தாராம் அவர்.

அவர் இறந்த பின்னர், அவர் செய்து கொண்ட ஏற்பாடுகள் நடந்தேறத் தொடங்கின.

நடிகை டெய்லர் அனுப்பிய மூன்று பாதுகாப்பு அதிகாரிகள், திரளும் கூட்டத்தினரைக் கட்டுப்படுத்த வந்து சேர்ந்தனர்.

அடையாளம் பொறிக்கப்படாத வான் ஒன்று இரண்டுபேருடன் வந்து சேர்ந்தது.

அவர்கள், ஹட்ஸனின் உடலை கடும்பச்சை நிறப்பை ஒன்றினுள் சுற்றி, வானில் வைத்தனர்.

இலட்சக்கணக்கான ரசிகர்களைப் பரவசத்தில் ஆழ்த்திய ஹட்ஸனின் அஸ்தி, வெள்ளை நிற கார்ட்போட் பெட்டியினுள் வைத்து மூடப்பட்டது.

இறந்தபின்னர், அவரின் உடலை எவரும் படம்பிடிக்க அனுமதிக்கப்படவில்லை. ஹட்சனின் உடல் அவரின் வேண்டுகோளுக்கு ஏற்ப தகனம் செய்யப்பட்டது.

அவரின் அஸ்தி அடங்கிய பெட்டி மீது 'ரொக் ஹட்ஸன்' என்று எழுதப்பட்ட லேபல் மட்டுமே ஒட்டப்பட்டிருந்தது.

'எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்ட முதலாவது உலகப் பிரமுகரின் இறுதிக்காலம் இப்படி அமைந்தது' என்று 'நேஷனல் என்குயரர்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது

# அரசியல் தீர்வுக்குரிய . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கும் கூறினோம்.

சுமார் 7,000 பேர் வரையில் தமிழர் இறந்து விட்டார்கள்என்று உறுப்பினர்கள் கூறினார்கள். ஒன்று மட்டும் உண்மை. ஏராளமான உயிர்கள் பறிக்கப்பட்டு விட்டன; உடைமைகள் அழிக்கப்பட்டு விட்டன. உண்மையான தொகையைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக உள்ளது. பத்திரிகைகளும்பிரசுரித்துஉள்ளன. உண்மைத்தொகையைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறோம். நிச்சயமாகக் குறிப்பிடத்தக்க அளவு உயிர்கள் பறிக்கப்பட்டு விட்டன என்பதை எந்தப் பயமும் இன்றிக் கூறுவேன். அது போன்றே உடைமைகளும் அழிக்கப்பட்டு விட்டன.

அண்மையில் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர் என்று அறிக்கைகள் வந்துள்ளன. வயல்களில் வேலை செய்து கொண்டு இருக்கையில் இவர்கள் கொல்லப்பட்டார்கள் வயல் அறுவடையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இது மிகவும் பாரதூரமான விஷயம். நீங்கள் இதை வேறு விதமாக வர்ணிக்கலாம்.

உங்களைப் போன்று இச்சம்பவத்தை வர்ணிக்கக் கூடிய சந்தர்ப்பம் எனக்கு இல்லை.

இனக் கொலையின் சாயல் தெரிவதாகச் சொல்லப்பட்டது.

முரசொலி மாறன்:

இது ஒரு இனக்கொலைதான்.

அமைச்சர் பகத்:

அப்படி நீங்கள் சொல்ல முடியும். ஆனால் நிலைமை மோசமடைந்து வருகிறது.

ஒரு கட்டத்தில் யுத்த நிறுத்தம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று நாம் சொன்னோம். அப்படி நடைபெறவில்லை

சொந்த, ஆயுதம் தரியாத அப்பாவிமக்களையே இலங்கைப் பாதுகாப்புப் படைகள் கொல்லும் அளவுக்கு நிலைமை வந்து விட்டது.

இது மிகவும் பாரதூரமான விஷயம். பிரதமமந்திரிகூட அதைச் சொல்லி விட்டார்.

'தீவிரவாதிகள் விடயத்தில் நடவடிக்கை எடுப்பது ஒரு விஷயம். சொந்த, அப்பாவியான நிராயுதபாணியான மக்களை வகை தொகை இன்றிக் கொல்வது வேறு விஷயம்'— இப்படிப் பிரதமர் சொல்லி விட்டார்.

இக்கட்டத்துக்கு நாம் வந்துவிட்டோம். இப்படியான செயலை நாம் கண்டித்துள்ளோம். இச்சபையே கண்டித்துள்ளது. இது கண்டிக்கப்படவேண்டியதும் கூட. மனித உரிமைகள் குழுக் கூட்டத்திலும் இதைக் கிளப்ப உள்ளோம். இந்தியக் குழுத் தலைவர் திரு. ஜி எஸ் தில்லான் குழுக் கூட்டத்தில் பேசுவார்.

ஐ. நா. அமைப்பு முறை எல்லோருக்கும் தெரிந்தது தானே. அங்கு பேசுவதால் உடனடிப் பலன் எதுவும் கிடைத்து விடாது காரணம் இலங்கை அரசுக்குப் பதில் கொடுக்கும் உரிமை உண்டு.

ஆனாலும் மனித உரிமைகள் சம்பந்தமான விஷயம் என்றபடியால் ஜெனிவாக் கூட்டத்தில் எமது பிரதிநிதி பேசுவார்.

ஒரு வித்தியாசம் என்ன என்றால் இலங்கை, இந்தியாவின் ஒரு பகுதி அல்ல.

இலங்கை ஒரு சுதந்திரமான நாடு.

ஓர் உறுப்பினர்:

எவ்வளவு பரந்த மனப்பான்மையான கூற்று?

திரு ஆர். மோஹனரங்கம்:

ஒவ்வொரு முறையும் எமக்குக் கிடைக்கும் பதில் இதுதான். அதே தருணத்தில் இலங்கையில் தமிழினமே அழிக்கப்பட்டு விடும்...

உபசபாநாயகர்: அமைச்சர் பேசி முடிக்க வழிவிடுங்கள்.

இரண்டு முதனிலைகள்

அமைச்சர் பகத்: இப்பிரச்சினைக்கு இரண்டு முதனிலைகள் உள்ளன.

முதலாவது, இப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப்பிரச்சினை. அந்த நாட்டின் ஐக்கியத்துக்கும் ஒருமைப்பாட்டுக்கும் உட்பட்ட முறையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்

அரசியல் தீர்வுக்கான முதலாவது முதனிலை இதுவாகும்.

இரண்டாவது நிலை, இராணுவத் தீர்வு ஒன்று மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதே.

அமைதிப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.

இது விஷயத்தில் சர்வதேச, நாகரிக நடைமுறைகளை இந்திய அரசு கையாண்டு வருகின்றது.

இரண்டாவது நிலையை இலங்கை அரசு கடைப்பிடிக்கத் தவறிவிட்டது என்பதை வருத்தத்துடன் கூறவேண்டியுள்ளது.

ஓர் உறுப்பினர்:

எப்படிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போகின்றீர்கள்?

அமைச்சர் பகத்:

ஆகவே இப்போது செயல்படும் காலம். தற்போதைய நிலை என்ன என்றால் காலம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இனியும் காலத்தை இழக்க நாம் தயாராக இல்லை.

எமது செயல்பாடுகள் எப்படி அமையவேண்டும் என்று திட்டம் தீட்டப்படுகிறது.

அப்பாவிமக்கள் கொல்லப்பட்டமை குறித்து இலங்கை அரசு சுதந்திரமான விசாரணை ஒன்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இராணுவ விசாரணை ஒன்றுக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அப்படியான விசாரணைக் கமிட்டி மூலம் நம்பிக்கையைப் பெற முடியாது.

இலங்கை அரசின் மீது தமிழ் அமைப்புக்கள், தலைவர்கள், மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர்.

அரசியல் தீர்வு ஒன்று தான் பிரச்சினையைத் தீர்க்க உள்ள ஒரே வழி.

கூட்டணி யோசனைகள்

இறுதியாக ஒன்று கூற விரும்புகின்றேன். தமிழர் விடுதலைக் கூட்டணியின் யோசனைகள் சம்பந்தமாக நாம் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றோம்.

கூட்டணியின் யோசனைகளில் கூறப்பட்டுள்ள ஓர் அம்சத்தையாவது இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் தான் கொழும்பு நோக்கிப் புறப்பட்ட திரு. ரொமேஷ் பண்டாரி சென்னையில் வைத்து திருப்பி அழைக்கப்பட்டார்.

இனியும் இனப்பிரச்சினையை இழுத்தடிக்கவிட முடியாது.

காலவரையறை ஒன்றைத் தயாரித்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

அந்தக் காலவரையறை ஒரு வாரமாக இருக்கலாம்; அல்லது இரண்டு, மூன்று வாரங்களாக இருக்கலாம்.

ஆனால் ஒருமாதகாலத்துக்கு மேலாக அந்தக் காலவரையறை இருக்க முடியாது.

தீர்வு காணுவதில் இருந்து நழுவுவதற்கு இலங்கை அரசை நாம் அனுமதிக்க முடியாது.

திருமலைத் தளம், கிழக்கு மாகாணத்தின் நிலையை மாற்ற இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கைகள் - இவற்றால் எமது பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது தெரியாதா? என்று சில உறுப்பினர்கள் கேட்டார்கள்.

ஆம். நிச்சயமாக அது எமக்குத் தெரியும். இது ஓர் அரசின் சட்டபூர்வமான கடமை ஆகும்.

இலங்கை ஓர் அணி சேரா நாடு. என்றாலும் வெளிநாட்டு வல்லரசுகளின் கப்பல்கள் வந்து தரித்துப்போக அந்த அரசு சில வசதிகளை அனுமதித்துள்ளது.

அந்த நாட்டில் வெளிநாட்டுத் தளங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பது எமக்குத் தெரியாது

அவர்கள் (இலங்கை) அதை மறுக்கின்றார்கள்.

அரசியல் அதிகாரப் பரவலாக்கலில் இன்னொரு முக்கிய அம்சம் உள்ளது என்று நாம் சொல்லி வருகிறோம்.

சட்டசபைகளுக்கு வழங்கப்படும் உள்நாட்டு சட்ட, ஒழுங்கு பராமரிப்பு சம்பந்தமான அதிகாரங்கள் பற்றிய விவரங்களை அறிய விரும்புகின்றோம்.

அந்த அந்தப்பகுதி மக்களின் பாதுகாப்பைக் கவனித்துக்கொள்ளக் கூடியதாக இச் சட்டங்கள் அமைய வேண்டும். இது மிக முக்கியமானது. இடைவெளியை நிரப்புவது எப்படி?

இன்னொரு முக்கிய விஷயம், காணிக் குடியேற்றம்.

கிழக்கு மாகாணத்தின் இனரீதியான சனத்தொகையை மாற்றி அமைக்கும் முறையில் குடியேற்றங்கள் நடைபெறுவதாகச் சில உறுப்பினர்கள் சபையில் சொன்னார்கள்.

தமிழரைத் துரத்தி விட்டு அந்த இடங்களில் சிங்களவர்களைக் குடியமர்த்தும் ஏற்பாடுகள் நடைபெறுவதாகக் கூறப்பட்டது.

இதை அனுமதிக்கக் கூடாது. கிழக்கு மாகாணத்தில் வாழும் சனத்தொகையின் இனவிகிதாசாரத்தை மாற்றும் முயற்சிகள் பற்றி எமக்குத் தெரியும்.

மாகாண சபைகளுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கல் வழங்குவதன் மூலமே இலங்கை அரசின் நிலைக்கும், தமிழர் நிலைக்கும் இடையில் உள்ள இடைவெளியை நிரப்ப முடியும்.

சிறு காலவரையறையினுள் அரசியல் தீர்வு ஒன்றைக் காணவே நாம் விரும்புகின்றோம்.

இது பற்றிதான் நாம் பேசிக் கொண்டு இருக்கின்றோம். பேச்சுக்கள் மீண்டும் தொடங்கும் முன்னர் அது பற்றித் தெரிவிப்போம்.

எம்மால் நியாயமானது என்று கருதப்படக் கூடிய அரசியல் தீர்வு சம்பந்தமான சில விவரங்களை, குறிப்பிட்ட காலவரையறையினுள் நாம் வெளியிடுவோம்.

இந்த இரண்டு அம்சங்களும் இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தப்படும்.

மீண்டும் பேச்சுக்கள் தொடங்கும் முன்னர் இவை தெரியப்படுத்தப்படும்.

தமிழர் இலங்கையில் கௌரவமாகவும் கண்ணியமாகவும் பாதுகாப்புடன் வாழக்கூடிய நிலைமையை இப்பேச்சுக்கள் மூலம் உருவாக்க இந்தியா நடவடிக்கை எடுக்கும்.

அதன் மூலம் இப்பிராந்தியத்தில் சமாதானமும் [illegible] நிலவும்.

இப்படி திரு. பகத் கூறி முடித்தார்.

# வடக்கு, கிழக்கு . . . .

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

சின்னங்கள் ஒரு குறித்த இடத்தில் பெருந்திரளாக உள்ளன. இவை பௌத்த குருமாரின் இருக்குழிகளாக இருக்கலாம். இவை பெருங்கற் பண்பாட்டின் பௌத்த நிலைப்பட்ட அமைப்புக்களாகலாம். கட்டிட அமைப்புக் பற்றிய கருத்துணர்வும் முருகைக்கல்லிலும் சுண்ணாம்புக் கல்லிலும் அவை கட்டப்பட்டிருப்பதும் ஈழத்தின் ஏனைய பகுதியிலுள்ளவற்றிலிருந்து யாழ்ப்பாணப் பௌத்த சின்னங்களைத் தெளிவாக வேறுபடுத்துகின்றன. இக் கட்டிடக்கலை மூலம் வெளிப்படும் வடிவை நாம் யாழ்ப்பாணப் பௌத்தம் என அழைக்கவிரும்புகிறோம். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிலவிய சமூக பொருளாதார பண்பாட்டு நிலைகள் எவ்வாறு பௌத்த மரபுகளை ஏற்றுக் கொண்டு அவற்றைச் சூழலுக்கேற்ற முறையில் உருவாக்க ஏதுவானது என்பதனை இச் சின்னங்கள் விளங்குகின்றன யாழ்ப்பாணப் பண்பாட்டு அருஞ்செல்வங்களுள் பௌத்தமும் பிரிக்க முடியாத பகுதியாக அமைந்துள்ளது.

கிறித்தவ ஊழியின் முதல் ஆயிரமாண்டின் பிந்திய அரைப்பகுதியில் தென்னிந்தியாவிலும் ஈழத்திலும் பிரதேசத்துக்குரிய அரச மரபுகள் தோன்றின. பிரதேசத்திற்குரிய வரையறுக்கத்தக்க மாறுபாடு கொண்ட பண்பாடுகளும் உருவாகின. தென்னிந்தியாவில் கன்னட,தெலுங்கு, தமிழ் அரச மரபுகளும் பண்பாடுகளும் வளர்ச்சியடைந்தது போல ஈழத்திலும் சிங்கள பௌத்த கோலமும் தமிழ்க் கோலமும் உருவாயின. இக் காலத்திலேயே சிங்களம் வேறுபட்ட மொழியானது. பௌத்தம் அரசுருவாக்கத்தோடு பின்னிப் பிணைந்தது. குள நீர்ப் பாய்ச்சல் முழு வளர்ச்சியடைந்தது. இதற்கு மாறாக, தமிழகத்தில் வைதிக மத மறுமலர்ச்சி ஏற்பட்டது; பக்தி இயக்கம் செல்வாக்குப் பெற்றது சமணமும் பௌத்தமும் செல்வாக்கிழந்தன. வளர்ந்து வந்தபல்லவ, பாண்டிய அரசுகள் அடிக்கடி ஈழத்தின் அரசியலில் தலையிட்டன். இப்பின்னணியில் தான் சிங்கள - பௌத்தத் தனித்துவம் உருவானது. தமிழ்ப்பண்பாட்டுக்கு எதிரான உணர்வும் அதனைத் தடுக்கும் முயற்சிகளும் மிகுந்தன. இத்தகைய போக்கின் வெளிப்பாடாகவே தீபவம்சம், மகாவம்சம் முதலிய பாளி மொழி வரலாற்று நூல்கள் தோன்றின.

பிரதேச அபிவிருத்திகளும் தனித்துவங்களும் உருவான இக்கால கட்டத்தில் யாழ்ப்பாணம் குறிப்பிடத்தக்க எந்தப் பங்கையும் ஆற்ற முடியாத நிலையில் இருந்தது. யாழ்ப்பாணத்தை வேள் அரசு நிலைக்கு உயர்த்திய உரோம வணிகம் கி. பி. 6ஆம் நூற்றாண்டளவில் வீழ்ச்சியடைந்தாலும் ஈழத்தின் வரண்ட வலயப் பகுதிகளிலும் தென்னிந்தியாவிலும் ஏற்பட்ட துரித வளர்ச்சி வணிகப் போட்டியில் யாழ்ப்பாணத்தைப் பின்னடையச் செய்தது. இக்காலத்தில் தமிழும் சைவமும் நிலவியதற்கான சான்றுகள் பெரும் பாலும் மாந்தையிலும் (மன்னார் மாவட்டம்) திருமலையிலும் இருந்தே கிடைக்கின்றன. யாழ்ப்பாண மையத்திலிருந்து ஈழத்தின் வரண்ட வலயத்தை நோக்கியும் தென்னிந்தியாவை நோக்கியும் செயற்பட்ட அலையில் யாழ்ப்பாணம் மாறி மாறி ஈர்த்துக் கொள்ளப்பட்டது.

பழந்தமிழக அரசர்கள் தமக்குள்ளே போரிட்டது போல ஈழத்து அரசர்களுடனும் போயுட்டனர். பலவேளைகளில் வீரம் விளைக்கும் இயல்புடைய தென்னிந்திய வேளிர்களும் இளவரசர்களும் ஈழத்தை வென்று ஈழத்து அரசர்களாகவே ஆட்சி புரிந்தனர். பிரித்தானியர் இலங்கையை வென்ற காலம் வரை இம்மரபு தொடர்ந்தது. கண்டியின் இறுதி மன்னன் தமிழனுமல்ல; சிங்களவனுமல்ல. தெலுங்கு மரபைச் சார்ந்தவன் விஜய நகரப் பேரரசின் மரபு வழியில் வந்தவன். அரச குலங்களுக்கிடையே நிகழ்ந்த இப்போட்டிகளைப் புறங் கண்டு சோழப்பேரரசு தமிழகம் ஒன்றை உருவாக்குவதில் வெற்றி கண்டது. கி. பி. ஆயிரம் ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகத் தென்னிந்தியாவில் சோழப் பேராரசு உருவானது. வணிக ஆர்வம். சிறப்பாக கடல் கடந்த வணிகத்தில் அரோபிய- சீன வணிகருடைய வணிகத்தைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகளால் சோழப் பேரரசு கடல் கடந்த நாடுகளுக்கும் செல்லவேண்டிய ஊக்கம் தவிர்க்க முடியாமல் ஏற்பட்டது. ஈழம் முதன் முதலில் சோழப் பேரரசின் குடியேற்ற நாடானது ஈழத்தின் வரண்ட வலயமும் அதன் நீர்ப் பாய்ச்சல் முறைகளும் செல்வாக்கிழந்தன. தலைநகரான அநுரதபுரம் கைவிடப்பட்டது பெருந்தொகையாகக் குடிபெயர்தல் நிகழ்ந்தது. இதனால் ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குடிப்பரம்பல் அமைப்பு மாற்றப்பட்டது. யாழ்ப்பாணத்தில் கந்தரோடைக்குப் பதிலாக நல்லூர் செல்வாக்குப் பெற்றது. சிங்களவர் செல்வாக்கும் தென்னிந்தியச் செல்வாக்கும் வீழ்ச்சியடைந்த போது, தொடர்ந்து ஏற்பட்டு வந்த நிகழ்ச்சிகளின் பெறுபேறாக 13 ஆம் நூற்றாண்டின்கடைக் கூற்றில் யாழ்ப்பாண அரசு எழுச்சிபெற்றது. சுருங்கக் கூறினால் வரலாற்று முதற்கால முதலே யாழ்ப்பாணத்தில் நிலவிய ஒரு குலவகை, சோழப் பேரரசால் ஊக்கம் பெற்று. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழருக்காகக் குறித்த பரப்பளவுகளையுடைய தாயகம் ஒன்றை உருவாக்கிக் கொண்டது.


யாழ்ப்பாண அரசு தமிழ்த் தாயக எண்ணக் கருவின் முன்னோடி.

இன்று செல்வாக்குப் பெற்றுள்ள தமிழ் (ஈழ) தாயகம் என்ற எண்ணக் கருவுக்கு யாழ்ப்பாண அரசே நேரடியான முன்னோடியாகும். இவ்வரசு தமிழர்களையும், சைவர்களையும் கொண்டிருந்தது இவ்வரசின் குடிப்பரம்பல் விரிவு இக்காலத்தில் எழுந்த யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட வரலாற்று இலக்கியங்களில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன இவ்வரசின் குடிப்பரம்பல் மேற்குக் கரையோரத்திலுள்ள (புத்தளம் மாவட்டம்) முதல் கிழக்குக் கரையோரத்திலுள்ள வெருகல் (கிழக்கு மாகாணம்)வரை அமைந்திருந்தது. இப்பிரதேசம் இன்றைய வடக்கு, கிழக்கு மாநிலங்களை உள்ளடக்கியதாகும். இவ்வரசில் தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து, சிறப்பாகத் தமிழகத்திலிருந்து குடிபெயர்ந்து வந்த குடித்தலைவர்கள் ஆதிக்கம் செலுத்தினர். பல காலங்களில் புதிய குடியேற்றங்களை அவர்கள் உருவாக்கினர்கள். அரசு வணிகத்திலும் வேளாண்மையிலும் தங்கியிருந்தது ஈழத்தில் தமிழருக்கான ஒரு தாயகம் ஈழத்தின் தென்பகுதியிலும் தென் தமிழ் நாட்டிலும் வலிமைமிக்க அரசுகள் இல்லாத காலத்திலேயே உருவாக முடிந்தது. போர்த்துக்கேயர் ஈழத்திற்கு வந்தபோது கோட்டை அரசு, கண்டி அரசு, யாழ்ப்பாண அரசு ஆகிய மூன்று அரசுகள் இருந்தன என்பதே உண்மையான நிலையாகும்.

(தொடரும்)

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 10



அனுப்புபவர் பெயர்:- ....................

விலாசம்:- ....................

....................

கையெழுத்து:- ....................

### இடமிருந்து வலம்:

1. கம்பர் பாடியது.
5 தை சேர்ந்தால் கல்வியாகும்.
6. பாதுகாப்பவன்.
9. தவறில்லாதது.
10. உடல் இயக்கத்திற்கு அவசியமானது. இறுதியில் இழப்பது- இறுதியை இழந்திருக்கிறது.
11 கருணையோடு கோபம் நிறைந்தவள்.
13. அரசனுக்கு ஆலோசனை தருபவர்.
14 அழகி.
15. வாங்குபவருக்கும் விற்பவருக்கும் இடைப்பட்டவர் பெறுவது.
17. நாட்டியத்தில் வருவது.
18. இனிப்பானது.

### மேலிருந்து கீழ்:

1. காவியம்.
2 வழமை நிலை.
3. காயம் இடம் மாறியுள்ளது.
4. சங்கீத நூல்
7. அறவிடப்படுவது.
8. ஒரு வகை மந்திரம்.
10. ஒரு வகைப் பண்.
11. உறவினால் வருவது
12. மூன்று. தீ மூட்டி வெடிக்க வைக்க உதவுவது
13. சோம்பிய நிலை.
14. நல்லது.
15. மரம்.
16. தண்ணீர் பாய்வது இப்படி.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.
3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப் படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல. 10, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
7. த ஷப்ரு-உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், ஷப்ரு யுனிக்கோ பிறின்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியாது.

* சொற்சிலம்பம் போட்டிகளில் பங்கு பற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சில சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதியோரிலிருந்து அதிஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 8

வெற்றி பெற்றவர்கள் விவரம்:

1 ஆம் பரிசு:- செ. குசையா, 26, தண்ணீர்த் தாங்கி வீதி, குருநகர், யாழ்ப்பாணம்

2 ஆம் பரிசு:- செல்வி. உமா முத்துத்தம்பி, '[illegible]' [illegible] லேன், திருநெல்வேலி தெற்கு

3 ஆம் பரிசு:- [illegible] சந்திரிகா, மில்லேன், கொக்குவில் கிழக்கு

### சொற்சிலம்பம் இல. 8 விடைகள்

இடமிருந்து வலம்:

1. தேசாதிபதி 6. சட்டம், 7. தாவணி, 8. வடை, 9. பகுதி, 11. காரம், 12. ராம், 13. மைதானம், 15. வதை, 16. சில், 17. வாணி, 20. நீதி, 21. சுவர், 22. ரம்பம்.

மேலிருந்து கீழ்:

1. தேசவழமை 2 சாட்டை, 3. திட, 4 பம்பரம், 5. கணிதம், 7. தாதி, 10. கும், 11 கானல் நீர், 12. ராதை, 14. தாசி, 15 வணிகம், 18. பணம். 19. சிக

## கண் அய ..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட காலம் தேவை. அந்தக்காலத்தில் சமிபாட்டுத் தொகுதிக்கு கூடியளவு இரத்தம் தேவைப்படுகிறது அதனால் இரத்தம் கூடியளவில் சமிபாட்டுத் தொகுதிக்குச்செல்கிறது.

அதன் விளைவாக மூளைப்பகுதிக்கும் கண் போன்ற உறுப்புகளுக்கும் இரத்தம் சற்றுக் குறைவாகவே செல்கிறது அதனாலே தான் கண்கள் அயர்ந்து தூக்கம் ஏற்படும் உணர்வு உண்டாகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மருதடியில் சகாய விற்பனை**

பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பொங்கல் 7.4.86 அன்று மில்க்வைற் விளம்பர விற்பனைக் காட்சிச்சாலையில் ரூ 15-ற்கு மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும் 1986ம் ஆண்டு கலண்டர், அறிவு நூல்களும், வீட்டுத்தோட்டத்திற்குரிய கீரைவிதைகளும் அன்பளிப்பாக வழங்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதியான பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

-மில்க்வைற் யாழ்ப்பாணம்

சஞ்சீவி

05.04.1986 சனிக்கிழமை

**திருக்குறள்**

வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க!

500 'மில்க்வைற்' நீலசோப் மேலுறையில் வரும் திருக்குறளை வெட்டி அனுப்பி உரையுடன் கூடிய திருக்குறள் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

# புழுக்க காலத்தில் வந்துள்ள அமைச்சரவைப் புழுக்கம்!

யார் அந்த முட்டாள்கள்?

புத்திசாலி அமைச்சரின் பேச்சைத் தொடர்ந்து கொழும்பு அரசு வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ள 900 கோடி ரூபா பெறுமதியான கேள்வி இது.

900 கோடி ரூபா என்றால், அந்தளவு பணம் இந்த ஆண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் தான் அந்தப் புத்திசாலியான அமைச்சர்.

அப்படி என்ன சொல்லி விட்டார் என்று எண்ணுகிறீர்களா?

"நாடு எரிந்து கொண்டிருக்கிறது இந்த நேரத்தில் 'முட்டையில் மயிர் பிடுங்கும்' செயலிலும் விவாதங்களில் வெல்லுவதிலும் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் முட்டாள்கள்" — இப்படி நிதி அமைச்சர் பேசி விட்டார்.

'This is not a time to split hairs or score debating points. Only fools will resort to such things when the whole country is burning'

வெளிநாடுகளிடம் "கெஞ்சிப்" பிச்சை எடுப்பவருக்குத் தான் தெரியும் சுயமரியாதையின் அருமை.

அதனால் அவர் வழமைக்கு மாறாக மிஞ்சிப் பேசி விட்டாரோ?

இனியும் 'பிச்சை' எடுத்துக் கொண்டுவர முடியாத இக்கட்டான நிலை, அவரை மிஞ்சிப் பேச வைத்து விட்டதோ!

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு; தீவிரவாதத்துக்கு இராணுவத் தீர்வு — இப்படிச் சொல்லிக் கொண்டு செயல்படுபவர் திரு. அத்துலத் முதலி.

ஒக்ஸ்போர்ட் பட்டம் பெற்றவர். அங்கு விவாத மேடைகளில் பங்கு பற்றி வெற்றி கண்டவர்.

இங்கு மட்டும் என்ன? குறைந்தா போய் விட்டார். வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வன்செயல்கள் இடம் பெற்ற வுடன் வெளியாகும் பாதுகாப்பு அமைச்சு அறிக்கைகளைப் பார்த்தால் தெரியும் அவரின் தர்க்கத் திறமை.

வானத் தாக்குதலை இடைநிறுத்தஞ் செய்து விட்டேன் என்றார் ஒரு நாள்.

தெல்லிப்பளையில் வானத்தாக்குதல் காரணமாக ஒருவர் மரணம் என்று கொழும்பு ஆங்கிலத் தினசரி செய்தி வெளியிட்டு விட்டது. அவ்வளவுதான். மறுநாள் மறுப்புவிட்டார்.

'ஹெலிக்கொப்டர் தாக்குதல், வானத்தாக்குதல் அல்ல' — இப்படி அவர் சொன்னார்.

1985இல் இந்திய உதவியுடன் இலங்கையில் யுத்த நிறுத்தம்கொண்டு வரப்பட்டது. அதை 'Ceasefire' என்று உலகம் ஆங்கிலத்தில் அழைத்தது.

அமைச்சர் அத்துலத் முதலி அப்படி அழைக்க விரும்பவில்லை. அது 'Ceasefire' இல்லை; வன்செயல்கள் நிறுத்தம் Cessation of Hostilities என்று சொன்னார்.

இப்படி வார்த்தைக்கு வார்த்தை வியாக்கியானம் செய்வதில் வல்லவரான அமைச்சர் லலித் அத்துலத் முதலி; புதிய இந்திய வெளியுறவுச் செயலாளரான திரு. ஏ. வெங்கடேஸ்வரனுக்கும் பதில் கொடுத்து விட்டார்.

டில்லியில் இருந்து தான் கொழும்புக்கு ஒருவர் போகவேண்டுமா?

ஏன் கொழும்பில் இருந்து ஒருவர் இங்கு வந்து பேசலாமே" — இப்படி திரு. வெங்கடேஸ்வரன் வந்ததும் வராததுமாகக் கூறிவிட்டார்.

பண்டாரி வருவார், வருவார் என்று வழிமேல் விழிவைத்துக் காத்துக்கொண்டிருக்கும் இலங்கைக்கு, வெங்கடேஸ்வரன் கேள்வி வேம்பாகி விட்டது.

"பேச்சு நடத்த கொழும்பில் இருந்து எவரும் டில்லி போகமாட்டார்கள்" — இப்படி அமைச்சர் அத்துலத் முதலி பதிலளித்துவிட்டார்.

முந்திரிக்கொட்டைபோல் முந்திக்கொண்டு வார்த்தைக்கு வார்த்தை வியாக்கியானம் கொடுத்துவரும் அமைச்சரை வெறுக்கும் நிலை சகபாடிகளுக்கு ஏற்பட்டுவிட்டதாம்.

இனப்பிரச்சினையைக் கையாளும்முறை, ராணுவத் தீர்வில் அவர் காட்டும் நம்பிக்கை அமைச்சர்களில் ஒரு சிலரை 'ஒன்றுகூட' வைத்துள்ளது.

ராணுவத்தீர்வில் நாட்டம் காட்டுவதைவிட்டு, இந்திய உதவியைப் பயன்படுத்தி பேச்சுக்கள் மூலம் தீர்வைக் காணும்படி அரசுத் தலைமைப் பீடத்துக்கு நெருக்குதல் கொடுக்கவும் தொடங்கிவிட்டார்கள் சில அமைச்சர்கள் என்று கொழும்பு அரசு வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

நான் பணம், பணமாக வெளியில் இருந்து கொண்டு வந்து குவிக்க, நாட்டில் பிணம் பிணமாக அல்லவா குவிகிறது' - என்ற சாரப்பட அரச மேலிடத்துக்குக் கூறி மனம்புழுங்கினாராம் நிதிஅமைச்சர்.

சித்திரை பிறந்துவிட்டது. வெயிலோ உக்கிரம். புழுக்கமும் கூடிவிடும். இது கால அவதான நிலையம் கூறுவது.

இக்காலகட்டத்தில் பாதுகாப்பாரின் போக்குப்பிடிக்காத அமைச்சர்களின் மனப் புழுக்கமும் கூடிவிடும் என்று கொழும்பு அரசு வட்டார அவதானிகள் கூறுகின்றனர்.

## பேராசிரியருக்கு இப்படி ஓர் ஆச்சரியம்

உள்ளும் புறமும் — குறுமுனி

தமிழ்ப் பகுதிகளில் நடப்பது தென்னிலங்கை மக்களுக்குத் தெரிவது இல்லையா?

தெரியாதபடி மூடி மறைக்கப்படுகின்றது.

கொழும்பு பொதுசன தொடர்பு சாதனங்கள் இதில் 'பெரும் பங்கு' வகிக்கின்றன.

இப்படி மூடி மறைப்பதால், மூடிமறைப்பவர்கள் எதைச் சாதித்துவிடப்போகிறார்கள்?

தமிழ் மக்கள் படும் இன்னல்கள் பற்றித் துணிச்சலுடன் எழுதும் ஒரே ஒரு ஆங்கில வார சஞ்சிகை 'சட்டர்டே ரிவியூ'.

அந்த சஞ்சிகையின் அபிமான வாசகர்களில் ஒருவர்தான் பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திரா.

சிங்கள இலக்கிய உலகின் ஜாம்பவான்.

அண்மையில் அவரின் கடிதம் ஒன்று 'சட்டர்டே ரிவியூ' வில் பிரசுரமாகி இருந்தது.

"தமிழர் பகுதிகளில் நிலவும் உண்மை நிலைமையை எடுத்துச் சொல்லியும் தென்னிலங்கை மக்கள் நம்புகிறார்கள் இல்லையே.

அவர்களுடைய உணர்வுகள் தமாஷாக்களாலும், கிரிக்கெட் போட்டிகளாலும், நந்தன விந்தன நிகழ்ச்சிகளாலும் மரத்துப் போய் விட்டன.

கஷ்டங்கள் அவர்களை வந்தடைந்த பின்னர் தான் அவர்களுக்கு உணர்வு வரும்.

இந்த நாட்டில் தமிழ்ச் சகோதரர்கள் படும் கஷ்டங்களை தென்னிலங்கை மக்களில் எத்தனை பேர் அறிந்துள்ளார்கள் என்பது குறித்து நான் ஆச்சரியமடைகின்றேன்"!

இப்படி பேராசிரியர் சரத்சந்திரா அந்தக் கடிதத்தில் மனந்திறந்து அழாக்குறையாக எழுதியிருக்கிறார்.

தமிழரின் உண்மை நிலையை அதுவும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'சட்டர்டே ரிவியூ' மூலம் தானே பேராசிரியரும் அறிந்து கொண்டார்.

இங்குள்ள உண்மை நிலையை சரியாகப் பிரசுரிக்கும்படி கொழும்பு பொதுசனத் தொடர்பு சாதனங்களை பேராசிரியர் கேட்டுக்கொண்டால் தென்னிலங்கை மக்களின் சிந்தனையில் பேராசிரியர் எதிர்பார்க்கும் அளவுக்கு ஒரு தெளிவு பிறக்க வழி ஏற்படாதா?

பேராசிரியர் இதைச் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வாரா?

இப்படி சிலர் கேட்பதில் தவறுண்டோ!

## செய்திக்கோவை

(மார்ச் 28 - ஏப். 4)

வெள்ளி:

- சன்னியாவில் கண்ணிவெடி; ஐந்து சிப்பாய் பலி.
- காரைதீவில் 350 இளைஞர் கைது.
- மட்டக்களப்பில் தோணி கவிழ்ந்து 8 பேர் மரணம்.

சனி:

- வடக்கில் இருந்து ரயிலில் போன தபால் பைகள் எரிந்து நாசம்!
- பருத்தித்துறையில் துப்பாக்கிச் சூட்டுக்கு வயோதிபர் பலி
- திருமலையில் கைதான 23 தமிழர் பற்றி தகவல் இல்லை.

ஞாயிறு:

- தமிழர் படுகொலை; மீண்டும் இந்தியா கவலை
- வந்தாறுமூலை தேடுதல்; 2 பேர் பலி.

திங்கள்:

- வந்தாறுமூலையில் நேரடி மோதல்: 2 சிப்பாய் மரணம் - போராளிகள் இருவர் தற்கொலை.
- கொண்டச்சி பண்ணை; பெரும்பான்மை இனத் தொழிலாளரை வெளியேறும்படி எச்சரிக்கை.
- மன்னார் -புத்தளம் இணைப்பு வீதி

செவ்வாய்:

- மயிலிட்டி, கட்டுவன் பகுதிகளில் படையினர் சூடு; 2 பேர் மரணம்.
- மட்டக்களப்பு கிரனேட் வீச்சு: மூன்று பேர் பலி.
- பருத்தித்துறையில் நேரடி மோதல்: ஷெல் தாக்குதல்.

புதன்:

- கொக்காவில் கண்ணி வெடித் தாக்குதல்; நேரடி மோதல்: 10 சிப்பாய் பலி
- சேந்தான்குளம், இளவாலைப் பகுதிகளில் வானச்சூடு.

# நிக்கராகுவாவை ஏப்பம் விட முயலும் அமெரிக்கா

அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றேகன் சமீபத்தில் மூன்று நாடுகளை 'புற்றுநோய்' என்று வர்ணித்திருந்தார்.

கியூபா, ஆப்கானிஸ்தான், நிக்கராகுவா ஆகியவையே இந்த மூன்று நாடுகளும் ஆகும்.

இவை மூன்றும் முன்பு ஒருகாலத்தில் அமெரிக்க ஆதரவு நாடுகளாக இருந்தன.

தற்போது இந்த நாடுகளில் கம்யூனிஸ ஆதரவு ஆட்சி நடக்கிறது.

சுமார் 23 ஆண்டுகளுக்கு முன்னர் கியூபா நெருக்கடியின் போது அமெரிக்காவும் ரஷ்யாவும் போரில் இறங்கும் பேராபத்து ஏற்பட்டிருந்தது.

உலக உலா — என்.பி.சீலன்

அப்போதைய ரஷ்யப் பிரதமர் நிகிட்டா குருஷேவ் கியூபாவில் ரஷ்ய ஏவுகணைகளைப் பொருத்தும் திட்டத்தை அறிவித்தார். அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடி இதனை வன்மையாக எதிர்த்தார்.

கியூபாவைச்சுற்றி கடல் தடையைப் போடப் போவதாக அறிவித்தார்.

ஏவுகணை அமைக்கும் திட்டத்தை குருஷேவ் கைவிட்டதன் மூலம் இந்த நெருக்கடி தளர்ந்தது. மற்றொரு உலக யுத்தம் மூளும் ஆபத்து தணிந்தது.

இச்சம்பவத்துக்குப் பின்னர் கியூபாவும் அமெரிக்காவும் நேரடியாக மோதும் ஆபத்து ஏற்படவில்லை.

அமெரிக்க அரசியலில் கென்னடி குடும்பம் செல்வாக்குப் பெறுவதற்கு இந்த கியூபா பிரச்சினை தான் காரணமாக அமைந்தது.

கியூபா தலைவர் பிடல் காஸ்ட்ரோ பல பதவி கவிழ்ப்பு முயற்சிகளில் இருந்து தப்பி தற்போது ஸ்திரமான ஆட்சியொன்றை நடத்தி வருகிறார்.

ஆப்கானிஸ்தான் ஒரு முஸ்லிம் நாடாக இருந்தது.

அடுத்தடுத்து நடந்த பதவி கவிழ்ப்புகளைத் தொடர்ந்து பாப்ரக் கர்மால் தலைமையில் தற்போது ஆட்சி நடக்கிறது.

சுமார் 1 லட்சம் ரஷ்யப்படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்தவாறு பாப்ரக் கர்மால் அரசுக்கு முட்டுக் கொடுத்து வருகின்றன.

கர்மால் அரசாங்கத்துக்கு எதிரான முஸ்லிம் கிளர்ச்சிக்காரர்களுக்கு அமெரிக்க ஆயுத உதவி இருந்தவருகிறது.

யுத்த கேந்திரத்தைப் பொறுத்து ஆப்கானிஸ்தானைத் தனது பிடியில் வைத்திருப்பது ரஷ்யாவுக்கு அவசியமாகிறது.

சர்வதேச அரங்கில் அமெரிக்காவுக்கு தலையிடி கொடுத்துவரும்மூன்றுவது நாடு நிக்கராகுவா ஆகும். இதுவும் அமெரிக்காவுக்கு சமீபமாகவே இருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி றேகன் நிக்கராகுவா சம்பந்தமாக இன்று பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்றை நடத்தி வருகிறார்.

நிக்கராகுவாவில் டானியல் ஓர்ரேகா அரசுக்கு எதிரான கிளர்ச்சிக்காரர்களுக்கு அமெரிக்கா உதவி செய்து வருகிறது.

கிளர்ச்சிக்காரர்களுக்குப் பத்துக் கோடி அமெரிக்க டாலர் வழங்கும் திட்டம் ஒன்றை ஜனாதிபதி றேகன் தயாரித்து அமெரிக்க மேல் சபையான செனட்சபையின் அங்கீகாரத்தையும் பெற்றிருந்தார்.

ஆனால் மக்கள் சபையான காங்கிரஸ் றேகனின் கோரிக்கையை நிராகரித்து விட்டது.

நிக்கராகுவா சம்பந்தமாக றேகனின் சமீபத்திய ஆத்திரமூட்டும் பேச்சுக்களுக்கு காங்கிரஸின் நடவடிக்கையே காரணம் ஆகும்.

எனினும் காங்கிரஸ் மீண்டும் கூடி இதனை விவாதிக்க இருக்கிறது.

தமது பதவிக் காலம் முடிவடைய முன்னர் டானியல் ஓர்ரேகாவின் ஆட்சி அஸ்தமனமடைவதைத் தான் பார்த்து விட விரும்புவதாக ஜனாதிபதி றேகன் பகிரங்கமாகவே அறிவித்துள்ளார்.

றேகனின் பயமுறுத்தலுக்கு எதிராக சின்னஞ்சிறு நிக்கராகுவா எவ்வளவு தூரம் தாக்குப் பிடிக்கும் என்பதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

## தெரிந்து . . .

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தொட்டு வணங்கினார்கள். வானத்திலிருந்து பூமாரி பொழிந்தது அகலிகையின் கொடிய பாவம் தீர்ந்து கௌதமரும் அவ்விடம் வந்து அகலிகையை ஏற்றுக் கொண்டார்.

தவறு செய்தவர்கள் தவற்றை உணர்ந்து திருந்தினால் அவர்களை உலகம் போற்றும்.★

## இலங்கை. ...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் ஈடுபட்டு ஒரு தேசிய தீர்வுக்கு வழிகாண வேண்டியது அவசியமாகும் இனப்பிரச்சினையை இலங்கையே தீர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

இப்படி திரு. டிக்ஸிற் சொன்னார்.

அமைச்சர் திரு. செ. இராஜதுரை பேசுகையில் இனப்பிரச்சினைத் தீர்வு காண இந்தியா தொடர்ந்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## உலக சமாதானத்திற்கு . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு. விவாகாதி கருமங்களாலும் உற்சவாதிகளாலும் மக்களுக்குச் சந்தோஷமும் சுகமும் உண்டு. இப்படி வாக்கிய பஞ்சாங்கம் கூறுகிறது.

இனி, சி. சிதம்பரநாதக் குருக்கள் அவர்களால் கணிக்கப்பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் கூறும் பலனை நோக்குவோம்.

புத்தாண்டு உதயமாகும் போது கும்பம் உதய லக்கினமாக அமைகின்றது. லக்கினத்திற் குரு பகவானிருப்பினும் லக்கினாதிபதி சனியின் தீய பார்வையினைப் பெறுவது உகந்ததல்ல. உலக சமாதானத்துக்குச் சவால் விடும் வகையில் புரட்சிகள், வன்முறைகள் தலைதூக்கியவண்ணம் இருக்கும்.

இலக்கினாதிபதி கேது, யுரேனஸ் இவற்றுடன் சம்பந்தப்படுதலால் கிளர்ச்சிகளும் யுத்த பயமும் ஏற்படலாகும். உலகத் தலைவர்கட்கு அரசியல் உயர்பீடத்திலுள்ளவர்களுக்கு கஷ்டமுண்டாகும். கல்வித்துறைகளில் முன்னேற்றமும் புதிய கண்டுபிடிப்புக்களும் உருவாகலாம்.

இலங்கையின் லக்கினமான கும்பத்தில் வியாழன் இருப்பது சற்றுச் சமாதானத்தை எதிர்நோக்கக் கூடியதாக இருப்பினும் சனியின் தீய பார்வையால் அந்நிய ஆதிக்கம் ஊடுருவ இடமளிக்கும்.

அந்நிய அரசின் நிர்ப்பந்தத்தினால் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு ஏற்பட இடமுண்டு.

தமிழர்களின் லக்கினமான மேடத்தின் அதிபதி செவ்வாய் அவ்விராசிக்கு 9ம் வீட்டிலிருந்து சொந்த வீட்டை திரிகோண பார்வையால் பார்ப்பதால் தமிழர்களுக்குச் சாதகமான பலன் கிட்டும். எனினும் அட்டமத்தில் சனி, யுரேனஸ் இருப்பதால் எதிர்பாராத இழப்புக்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தும். பருவமழை நன்மை பயக்கும்.

இங்ஙனம் வாக்கிய பஞ்சாங்கமும் திருக்கணித பஞ்சாங்கமும் பிறக்கப் போகும் அக்ஷய புத்தாண்டுப் பலனைக் கூறுகின்றன எது எப்படி இருப்பினும் யோக சுவாமிகள் கூறியதுபோல் எல்லாம் 'எப்பவோ முடிந்த காரியம்' என்பதாகும்.

எது எது, எப்ப எப்ப, எப்படி எப்படி, நடக்க வேண்டுமோ அது அது, அப்ப அப்ப, அப்படி அப்படி நடந்தே தீரும்.

## கருத்துக் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி

இரண்டு கிடப்பதாக ஆஸ்பத்திரிகள் அபாயமணி அடிக்கின்றன. அது மிகவும் கவலைக்குரியது. உயிருடன் போராடும் நோயாளிக்கு இரத்தம் கொடுத்து அவன் உயிரை மீட்க முடியாது போனால், அந்தப் பாவம் முழுச் சமுதாயத்தையும் வந்து சேரும்.

இரத்ததானம் செய்வதால் தமது உடல் நலம் கெட்டுவிடும் என்று சிலர் தப்பாக நினைக்கிறார்கள். அதனால் தான் அவர்கள் தமது உறவினருக்கு இரத்தம் தேவைப்பட்டால்கூட தரகர்கள் மூலம் பணத்துக்கு அதனை வாங்குகிறார்கள். இது அபத்தம்.

தானம், பாவத்தை நீக்கி தர்மத்தைச் சேர்ப்பது. தானங்களில் பல வகைகள். வயிற்றுக்கு உணவு அளிக்கும் அன்னதானத்தை விடவும் ஒருபடி உயர்ந்தது உயிரைக் காப்பாற்றும் இரத்த தானம்.

இன்றைய நெருக்கடி மிக்க சூழ்நிலையில் மிகவும் அவசியமான தானமும் அதுவே. நாளைக்கு வீதியால் போகும்போது அல்லது வீட்டில் இருக்கும் போது குண்டடிபட்டுச் செத்தால் அந்த உடலில் இருக்கும் இரத்தத்தால் யாருக்கு என்னபயன்? அதற்கு முன்னரே இரத்த தானம் செய்வோமாயின் அந்தப் புண்ணியமாவது எம்மோடுகூட வருமல்லவா?

## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகின்றது.

(இது நேற்றைய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 39. 58 |
| அமெ. டாலர் | 27. 47 |
| இந்திய ரூபா | 02. 24 |
| மார்க் (ஜெர்மனி) | 11. 37 |
| அவுஸ். டாலர் | 19. 46 |
| [illegible] | 19. 50 |
| [illegible] (பிரெஞ்சு) | 03. 63 |

## மருதானையில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

8.40 மணியளவில் கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் அனுராதபுரம்-கல்கமுவ பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் லொறியொன்றினுள் குண்டு ஒன்று செம்பலை கெரில்லாக்களினால் வைக்கப்பட்டது.

இப்பொதியினை எடுத்துச் சென்ற ஒருவர் அதற்குள் மின்சாதனப் பொருட்களை கண்ணுற்று அதனை தொழில்நுட்பக் கல்லூரி சந்தியில் விட்டுச் சென்றார்.

இக்குண்டு இரவு 9.05 மணிக்கு வெடித்தது.

இந்தப் பொதியில் எமது சின்னமும், "தாயகம் இன்றேல் வீரமரணம்" என்ற புரட்சி வாசகமும் பொதிக்கப்பட்டிருந்தன.

சிறீலங்கா பொருளாதாரத்தை சீர்குலைத்து அதன் மூலம் சிறீலங்கா அரச பயங்கரவாதத்தை அழித்தொழிக்கும் எமது நடவடிக்கைத் திட்டங்களுள் இதுவும் ஒன்று.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

## நீத்தார் பட்டியல்

### கந்தையா இராசையா

(இளைப்பாறிய உத்தியோகத்தர், சீனிக் கூட்டுத்தாபனம் அம்பாறை) காலமாகிவிட்டார். இவர் கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் புதல்வரும் நாகம்மாவின் (ஆசிரியை) அன்புக் கணவரும் யாழினி, சிவகுமாரன் (ஜேர்மனி), ரூபகுமாரன் (ஜேர்மனி), குமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரன் (இலங்கைவங்கி சாவகச்சேரி) அவர்களின் மாமனாரும் மயூராவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள், கோப்பாய் வடக்கு "கைலயம்பதி" இல்லத்திலிருந்து இன்று 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் — தகவல்: திருமதி இராசையா

## 80 தமிழ் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்குச் செல்லப் புறப்பட்டோம்' - இப்படி அகதிகள் விசாரணையின் போது தெரிவித்தனராம்.

நான்கு பேரைத் தவிர ஏனைய சுமார் 80 அகதிகளையும் நேற்றுக் கடற்படையினர் திருமலையில் உள்ள அகதி முகாம்களில் கொண்டுபோய் விட்டனர்.

'வீடுகள் கட்டித் தரப்படும்; புனர்வாழ்வு வசதிகள் செய்து தரப்படும். அதுவரை அகதி முகாம்களில் தங்கியிருங்கள்' - இப்படி அவர்களுக்குக் கூறப்பட்டதாம்.

தடுத்து வைக்கப்பட்ட நான்குபேர் மீதான விசாரணை தொடர்ந்து நடத்தப்படுகின்றது

### அடகு வைத்தோர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

அடகு வைத்தோர் சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் யாழ் பல்கலைக்கழக வளவில் இடம்பெறும்.

இலங்கை வங்கி முன்னும் மறியல் இயக்கம் தொடங்குவது பற்றியும் அடுத்த நடவடிக்கை பற்றியும் இக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும்.

### அடிக்கல் வைபவம்

நல்லூர், ஏப் 5

திருநெல்வேலி செங்குந்தா இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தைச் சுற்றி மதில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

## பலாலியில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தது.

சில மணித்தியாலங்கள் கழித்து மயிலிட்டிப் பக்கத்துக்கு நடந்து வந்த சிப்பாய்கள் மயிலிட்டி - கட்டுவன் வீதிக்கு கிழக்குப்புறமாகவும் இராணுவ விமான நிலைய தளங்களுக்கு மேற்குப் புறமாகவும் உள்ள சில வீடுகளைச் சேதமாக்கியதாகக் கூறப்படுகின்றது.

கட்டுவன் சந்திப்பகுதி, குரும்பசிட்டி, மயிலிட்டி, பலாலிமடத்தடி என்னும் பகுதிகளில் பெரும் பரபரப்பு நிலவுகின்றது.

தொடர்ந்து அப்பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, [illegible] வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 05-04-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org